திருச்செங்காட்டங்குடி

# ஸ்ரீ உத்தராபதீஸ்வரர் கோயில் வரலாறு

(கணபதீச்சரம்)



முன்கோபுரவாயில்

தேவஸ்தான வெளியீடு — 1957.

உ

# திருச்செங்காட்டங்குடி

# ஸ்ரீ உத்தராபதீஸ்வரர் கோயில் வரலாறு

## (கணபதீச்சரம்)

தேவாரப்பாடல் பெற்றது.

சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகாவின் (Hindu Religious and Charitable Endowments) ஆதரவில் பல கோயில் வரலாறுகளை எழுதிவருகின்றவரும்,
H. R. & C. E. சமயச் சொற்பொழிவாளரும் ஆகிய
திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை தமிழ் ஆசிரியர்

**திரு R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால்**

எழுதப்பெற்று

மேற்படி தேவஸ்தானம் மானேஜிங் டிரஸ்டி
**திரு R. ராதாகிருஷ்ண நாயுடு அவர்கள்** (ஏனங்குடி)
**திரு O. P. G. தெண்டபாணி செட்டியார் அவர்கள்**
நாகூர் (டிரஸ்டி)
**திரு N. ஸ்ரீநிவாசன் அவர்கள்** (டிரஷரர்) E. O.

ஆகியோர்களால் வெளியிடப்பெற்றது

**தேவஸ்தான வெளியீடு**

1957

உரிமை செய்யப்பெற்றது ]

[ விலை 8 அணா

# பதிப்புரை.

---

திருச்செங்காட்டங்குடி ஸ்ரீ உத்தராபதீஸ்வரரின் பெருமைகளையும், மூர்த்தி தலம் தீர்த்தம் முதலியவைகளின் சிறப்புக்களையும், பல கல்வெட்டுச் செய்திகளையும், பிறவரலாறுகளையும் இவ்வரலாறு எடுத்துக்கூறுவது. திருச்சி தமிழ் ஆசிரியர் திரு **R. பஞ்சநதம் பிள்ளை** அவர்கள் எளிய நடையில் சுருக்கமாக இதை எழுதிக் கொடுத்தார்கள். அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி. கோயிலைப்பற்றியும் கோயிலில் உள்ள நவதாண்டவ மூர்த்திகளைப்பற்றியும் உள்ள பல படங்கள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. சென்னை அறநிலையப் பாதுகாப்புக் கமிஷனர் திரு **A. உத்தண்டராம பிள்ளை**, B. A., B. L., I. A. S. அவர்கள், டிப்டி-கமிஷனர் திரு **A. சர்க்கரை**, B. A., B. L. அவர்கள், உதவி-கமிஷனர் திரு **K. V. குமரன் நாயர்**, B. A. அவர்கள் ஆகியோருடைய ஊக்கத்தினால் இது வெளியிடப் பெற்றுள்ளது. கோயிலுக்கு வந்து தரிசிப்பதுடன் கோயிலின் பெருமைகளையும் எல்லோரும் அறிந்துகொள்ளும் பொருட்டுக் குறைந்த விலையில் வழங்கப்படுகிறது.

யாவரும் படித்துப் பயன்பெறும்வண்ணம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**R. ராதாகிருஷ்ண நாயுடு,**
மானேஜிங் டிரஸ்டி.

**O. P. G. தெண்டபாணி செட்டியார்,**
டிரஸ்டி.

**N. சீனிவாசன்,**
டிரஷரர்
நிர்வாக அதிகாரி.

திருச்செங்காட்டங்குடி
தேவஸ்தானம்
8—11—56

# முன்னுரை

அன்பினால் அகங்குழைந்து வழிபடும் அடியார்களுக்கு அருள் செய்வான்வேண்டிப் பரம்பொருளாகிய இறைவன் ஆங்காங்குள்ள தலங்களில் உருவங்கொண்டு எழுந்தருளியிருக்கின்றான். அத்தகைய சிறப்பிடங்களே தெய்வ உணர்ச்சியை உண்டாக்கும் திருக்கோயில்களாக விளங்குகின்றன. சோழநாட்டில், காணும் இடங்களெல்லாம் கண்ணையும் கருத்தையும் கவரும்படியான பல கோயில்கள் உள்ளன. அவைகளுள் தஞ்சாவூர் ஜில்லா நன்னிலம் தாலூகாவில் திருக்கண்ணபுரத்துக்குக் கிழக்கில் ஒரு மைல் தூரத்தில் **திருச்செங்காட்டங்குடி** என்னும் தலம் உள்ளது. கணபதி வழிபட்டதால் **கணபதீச்சரம்** எனவழங்கும், வாளான் மகவரிந்தூட்டும் செயற்கருஞ் செயல் செய்த சிறுத்தொண்டருக்கு அருள் செய்யவேண்டி, பைரவவேடங்கொண்டு தோன்றிய **ஸ்ரீ உத்தராபதியார்** எழுந்தருளிய திருப்பதி, திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் தேவாரம் பாடியதலம். பல கல்வெட்டுக்களையுடையது. வாதாபி கணபதியையும், நவதாண்டவ மூர்த்திகளையும் கொண்டது. பழமையான கோயில். கோயிலுக்கு வருவோர் கோயிலின் பெருமைகளையும் அறிந்துகொள்வது நலம். சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகாவின் (Hindu Religious and Charitable Endowments) அனுமதிப்படி இவ்வரலாறு சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்தையும், தலபுராணத்தையும், கல்வெட்டுக்களையும் தழுவிச் சுருக்கமாக எழுதப்பெற்று, (H. R. & C. E.) கமிஷனர்-ஆணையாளர், டிப்டி-கமிஷனர், துணை-ஆணையாளர் ஆகியோர்களால் அங்கீகாரம் செய்யப்பெற்றது. ஓதுவார் திரு. தியாகராஜ தேசிகர் அவர்கள் தலபுராணக் குறிப்புகளையும், சில பாடல்களையும் உதவினார்கள்.

பழங்காலச் சின்னங்களாகிய கோயிற் சிற்பங்களைப் பாதுகாப்பதிலும், தலவரலாறுகளை வெளியிடச் செய்வதிலும், சமய உண்மைகளைப் பரப்புவதிலும் தற்போதுள்ள அறநிலையப் பாதுகாப்புத்தலைவர்கள் வேண்டுவன செய்துவருகிறார்கள். அவர்களுக்கு நமது நன்றி உரியதாகும். இதில் கோயில் விளக்கமும், தலப்பெருமைகளும், கல்வெட்டுக்களும், வரலாறுகளும், துதிப்பாடல்களும் சேர்க்கப்பெற்றுள்ளன. மேலும் இத்தலத்திலுள்ள வாதாபிகணபதி நவதாண்டவமூர்த்திகள், கோயிலின் பலபகுதிகள் இவைகளைக் காட்டும் சுமார் 20 படங்கள் இதில் தொகுக்கப்பெற்றுள்ளன. அன்பர்கள் படித்து ஸ்ரீ உத்தராபதீஸ்வரரின் திருவருளைப் பெறுவார்களாக.

திருச்சிராப்பள்ளி
8—11—56

**R. பஞ்சநதம் பிள்ளை,**
தமிழ் ஆசிரியர்.

# உள்ளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கோயில்களும் குறிகளும் | ... | 1 |
| 2. | கோயிலும் இருப்பிடமும் | ... | 4 |
| 3. | கோயிலின் அமைப்பு | ... | 9 |
| 4. | கோயிலின் படம் | ... | 11 |
| 5. | மூர்த்திகளின் பெயர்கள் | ... | 13 |
| 6. | தீர்த்தங்கள் | ... | 14 |
| 7. | தலப்பெருமைகள் | ... | 15 |
| 8. | திருப்பணிகள் | ... | 18 |
| 9. | சிற்பங்கள் | ... | 19 |
| 10. | நவதாண்டவமூர்த்திகள் | ... | 21 |
| 11. | தினப்பூஜையும் திருவிழாக்களும் | ... | 24 |
| 12. | வருமானமும் சொத்துக்களும் | ... | 28 |
| 13. | நிர்வாகம் | ... | 28 |
| 14. | கல்வெட்டுக்கள் | ... | 29 |
| 15. | புராண வரலாறுகள் | ... | 40 |
| 16. | இலக்கியப் பாடல்கள் | ... | 49 |


## கோயில் விளக்கம்

**கோயில்**—கணபதீச்சரம்
**இடம்**—திருச்செங்காட்டங்குடி
**விநாயகர்**—வாதாபிகணபதி
**மூலவர்**—ஸ்ரீ கணபதீச்சரர்—ஸ்ரீ உத்தராபதீஸ்வரர்
**அம்மன்**—வாய்த்ததிருக்குழலி—சூளிகாம்பாள்
**தீர்த்தம்**—சத்திய தீர்த்தம்—சூரிய தீர்த்தம் முதலியன
**மரம்**—ஆத்தி மரம்
**வழிபட்டோர்**—சிறுத்தொண்டர் முதலியோர்
**முக்கிய விழா**-அமுது படையல் (சித்திரைப் பரணிநாள்)

தஞ்சாவூர் ஜில்லா, நன்னிலம் தாலூகாவில், திருவாரூர்–மாயூரம் புகைவண்டிப் பாதையில், நன்னிலம் ரயில் நிலையத்திலிருந்து திருப்புகலூர்–திருக்கண்ணபுரம் வழியாகச் சுமார் 6 மைல் தூரத்தில் உள்ளது. திருஞான சம்பந்தராலும், திருநாவுக்கரசராலும் தேவாரம் பாடப் பெற்றது.



சிவபெருமானை கணபதி வழிபடுதல்

# திருச்செங்காட்டங்குடி

## ஸ்ரீ உத்தராபதீஸ்வரர் கோயில் வரலாறு

## (கணபதீச்சரம்)

" உருகுமனத் தடியவர்கட்கு ஊறுந்தேனை
உம்பர்மணி முடிக்கணியை உண்மைநின்ற
பெருகுநிலைக் குறியாளர் அறிவு தன்னைப்
பேணிய அந்தணர்க்கு மறைப்பொருளைப் பின்னும்
முருகுவிரி நறுமலர்மே லயற்கும் மாற்கும்
முழுமுதலை மெய்த்தவத் தோர்துணையை வாய்த்த
திருகுகுழல் உமைநங்கை பங்கன் தன்னைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே "

(திருநாவுக்கரசர்)

### 1. கோயில்களும், குறிகளும்

ஆதியந்தங்கடந்த பரம்பொருளாகிய இறைவன், உலகத்திலுள்ள பல உயிர்களும் துன்பம் நீங்கி இன்பம் பெற்று உய்யும் வண்ணம் தன் கடந்த அருவ நிலையிலிருந்து இறங்கி இப்பூவுலகில் ஆங்காங்குள்ள பல தலங்களில் உருவத்திருமேனிகொண்டு எழுந்தருளியிருந்து பக்தியுடன் வழிபடும் அடியார்களுக்கு அருள் செய்து வருகிறான். அத்தகைய சிறப்பிடங்களே ஆலயங்கள் ஆகும். பசுவின் உடல் முழுதும் பால் மறைந்திருந்த போதிலும் மடியின் மூலமாகவே பால் வெளிப்படுவது போலவும், சூரியன் எங்கும் பரவியிருந்த போதிலும் பளிங்குக் கல்லின் (Lens) மூலமே கிரணங்கள் விரைவில் வெளிப்படுவது போலவும், நிலத்துக்கடியில் நீர் இருந்தபோதிலும் தோண்டிய இடத்தில்தானே நீர் தோன்றுவது போலவும், இறைவன் எங்கும் வியாபித்திருந்தபோதிலும் பெரியோர்கள் அமைத்த ஆலயங்களில் உள்ள

மூர்த்திகளின் மூலமாகவே இறைவன் வெளிப்பட்டு அன்பர்களுக்கு அருள் செய்வான். "இருஞ்சுரபிக் கெங்கும் உருக்காண ஒண்ணுத பால் முலைப்பால் விம்மி ஒழுகுவது போல வெளிப்பட்டருள்வன் அன்பர்க்கே"

(*சிவஞானசித்தியார்*)

*"எங்கும் சிவனிருப்பன் ஆனாலும் ஏசற்ற*
*சங்கமத்தும் சற்குருவின் தன்னிடத்தும்—லிங்கத்தும்*
*ஆவினுடம் பெல்லாமும் ஆவரித்து நிற்கினும்பால்*
*பாவுமுலைக் கண்மிகுதிப் பார்"*

(சிவஞானப் பிரகாச வெண்பா.)

இவ்வாறு புறத்தே கோயில் கொண்டு விளங்கும் பெருமான், பக்தியுடன் வழிபடும் அடியார்களின் உள்ளத்தையும் கோயிலாகக் கொண்டு அருள் செய்கின்றான். "காலையும் மாலையும் கைதொழுவார் மனம் ஆலயமாகும்"

*"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக*
*வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக*
*நேயமே நெய்யும் பாலா நிறைய நீரமைய ஆட்டிப்*
*பூசனை யீசனார்க்குப் போற்றவிக் காட்டினேமே."*

(அப்பர்)

தென்னுடாகிய தமிழ்நாடு மிகுதியான கோயில்களைக் கொண்ட இடமாகும். நாட்டை வளப்படுத்தும் ஆறுகளும், சோலைகளும், வாவிகளும், சாலைகளும் சூழ்ந்து இயற்கைக் காட்சிகளைத்தந்து இன்பம் ஊட்டுகின்றன. வானளாவிய கோபுரங்களும், விமானங்களும், காண்போருக்குத் தூரத்திலிருந்தபடியே தெய்வ உணர்ச்சியைத் தூண்டும் நிலையில் அமைந்துள்ளன. உடலுக்கு உணவைத்தரும் வயல்கள் அமைந்திருப்பது போல, உள்ளத்துக்கு உணவாகிய பக்தியை உண்டாக்கும் பாங்குடைய கோயில்கள் பல அணிகளாக விளங்குகின்றன. "திருக்

கோவில் இல்லாத திருவிலூரும், பாங்கினொடு பல தளிகள் இல்லா ஊரும் அவை எல்லாம் ஊரல்ல" என்றபடிக்கில்லாமல் நாட்டின் பல இடங்களிலும் சைவ–வைணவத்தலங்கள் பல ஆங்காங்கு மிளிர்கின்றன. இவ்வகையில் தென்னுடு தெய்வ மணங் கமழும் திருநாடாகத் திகழ்கிறது.

*" நோக்கிய இடங்களெல்லாம் நுவலருந் தலங்களாக*
*தேக்கிய தீர்த்தமாகச் சிவலிங்க மூர்த்தியாக*
*ஆக்கிய தவத்தாளுளும் அடைந்தவர்க்கற மென்ருேதும்*
*பாக்கிய மாக்கி மேலுய்ப்பது முது சென்னி நாடு "*

**(மகாவித்வான்–மீனுட்சிசுந்தரம் பிள்ளை.)**

மேலும் நமது முன்னோர்களின் நாகரீக வாழ்வுக்கு எடுத்துக் காட்டாக விளங்குவன, முன்னோர்கள் எடுப்பித்த திருக்கோயில்களாகும். இவைகள் பக்தியை உண்டாக்கும் இடங்களாவதன்றிப் பெருஞ் சிற்பங்கள் நிறைந்த பெட்டகங்கள் ஆகும். மின்சார அணுக்கள் நிறைந்துள்ள இடம் (Power House) போலத் திருவருள் அணுக்கள் நிறைந்த சிறப்பிடங்கள் ஆகும். எழுத்தின் ஒலிவடிவை உணர்த்துவதற்கு வரிவடிவெழுத்து அமைந்தது போலக் கட்புலனுல் காணமுடியாத கடவுளைக் காட்டும் சாதனங்களாகக் கோயில்கள் விளங்குகின்றன. இவைகளை நமது முன்னோர்கள் தம் உயிரினும் மேலாகப் பாதுகாத்துப் பின் வழியினராகிய நமக்கு அருஞ் செல்வங்களாக வைத்துச் சென்ருர்கள். நாட்டின் நலத்துக்கும், மக்களின் நல்வாழ்வுக்கும் கோயில்கள் இன்றியமையாதன. வாழ்க்கைக் கடலில் அகப்பட்டுத் துன்புறும் மக்களுக்குக் கோயில்கள் கலங்கரை விளக்கங்களாக (Light House) விளங்குகின்றன. " கோயில் விளங்கக் குடி விளங்கும். ஆலயந் தொழுவது சாலவும் நன்று " என்பவை ஆன்ருேர் கூறிய அனுபவ மொழிகளாகும்.

ஆதலின் பெறுதற்கருமையான மனிதப்பிறவியைப் பெற்றவர் அனைவரும், கோயில்களில் குடிகொண்ட பசுபதியாகிய பரமனை அன்பினால் வழிபட்டு, அவன் வகுத்த நன்னெறியில் சென்று அவனருளைப் பெறமுயலுதல் சிறந்த கடமையாகும். "மானுடப் பிறவிதான் வகுத்தது மனவாக்காயத்து ஆனிடத்தைந்தும் ஆடும் அரன்பணிக்காக அன்றோ" என்றும், "உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம் உடம்பில் உத்தமனைக் காண்" என்றும் ஆன்றோர்கள் கூறியுள்ளார்கள்.

## 2. கோயிலும் இருப்பிடமும்

தென்னாடாகிய தமிழ் நாட்டில் பெருமான் உறையும் கோயில்கள் பல. அவை சிவன் கோயில்கள், முருகன் கோயில்கள், திருமால் கோயில்கள், அம்மன் கோயில்கள் முதலியன. இவைகளில் அந்தந்த சமயத் தலைவர்களால் தேவாரப் பதிகம் பாடப்பெற்ற தலங்களும், பெயர் மட்டும் குறிக்கப்பெற்ற வைப்புத் தலங்களும், தல புராணங்களைக் கொண்ட கோயில்களும், தனிப்பாடல் பெற்ற தலங்களும், பிற்காலத்தில் பல பெரியோர்களால் அமைக்கப் பெற்ற அபிமானத் தலங்களும் அடங்கியுள்ளன. இவைகளில் தேவாரப் பாடல் பெற்ற 274 தலங்களில், காவிரிக்குத் தென்கரையில் உள்ள 127 தலங்களில் 79-வது தலமாக விளங்குவது திருச்செங்காட்டங்குடி என்னும் தலமாகும். குடி என்னும் முடிபைக்கொண்ட தலங்களுள் ஒன்றாகும். இத்தலத்தைக் குறித்துத் திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் தேவாரம் பாடியுள்ளார்கள்.

எப்போதும் வற்றாத நீர்ப்பெருக்கையுடைய காவிரி நதிபாயும் நாடு சோழ நாடு. இதற்கு வளவ நாடு, சென்னி நாடு, அபய நாடு, கிள்ளி நாடு, செம்பியர் நாடு, அகளங்க நாடு, பெருநீர் நாடு,

பொன்னி நாடு, முதலிய பெயர்களும் வழங்கும். "சோழ நாடு சோறுடைத்து" என்னும் பழமொழி யைப்பெற்றது. இந்நாட்டின் பெருமையை மகாவித்து வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பின்வருமாறு காட்டுகிறார்.

*"பூவினுள் பதுமம் போலும் புருடருள் திருமால் போலும்*
*காவினுள் கற்பம் போலும் கலைகளுள் ஞானம் போலும்*
*ஆவினுள் சுரரான் போலும் அறத்துள் இல்லறமே போலும்*
*நாவினுள் மெய்ந்நாப் போலும் நாட்டினுள் சோழநாடு"*

மேலும் "முந்நாட்டின் முன் நாடாய் சோழர் குலக் கொடியே என்னக் காவேரி வளங்காட்டும் திருநாட்டின் பெருமையது கரையப் போமோ" என்று மற்றோராசிரியர் கூறுகிறார்.

இத்தகைய பெருமைகளையுடைய சோழ நாட்டில் தஞ்சாவூர் ஜில்லா — நன்னிலம் தாலுகாவில், திருவாரூர் — மாயூரம் புகைவண்டிப் பாதையில் நன்னிலம் ரயில் நிலையத்திலிருந்து திருப்புகலூர், திருக் கண்ணபுரம் வழியாகச் சுமார் 6 மைல் தூரத்தில் திருச்செங்காட்டங்குடித் தலம் உள்ளது. நன்னிலம் நிலையத்திலிருந்து நன்னிலம் — நாகை மோட்டார் வண்டியில் ஏறிக் கிழக்கில் 4 மைல் தூரத்திலுள்ள திருப்புகலூரை அடைந்து, அங்கிருந்து முடிகொண் டான் ஆற்றைக் கடந்து தெற்கே ஒரு மைல் தூரத்தி லுள்ள திருக்கண்ணபுரத்தை அடைந்து, அங்கிருந்து கிழக்கே ஒரு மைல் தூரத்திலுள்ள திருச்செங்காட்டங் குடியை அடையலாம்.

நாகையிலிருந்து திருமருகல் மூலமாயும் வரலாம். திருமருகல் தலத்திலிருந்து மேற்கே ஒன்றரை மைல் தூரத்தில் இத்தலம் உள்ளது. வடக்கில் முடிகொண் டான் ஆறும், தெற்கில் புத்தாறும் ஓடுகின்றன

திருச்செங்காட்டங்குடி என்பது ஊருக்கும், கணபதீச்சரம் என்பது கோயிலுக்கும் பெயர்களாக அமைந்துள்ளன. விநாயகர் கஜமுகாசுரனைக் கொன்றபோது அசுரனுடைய இரத்தம் பெருகிச் செங்காடாய் இருந்தமையால் தலத்துக்குச் **செங்காட்டங்குடி** என்றும், கணபதி பெருமானைப் பூஜித்து வழிபட்டதால் கோயிலுக்குக் **கணபதீச்சரம்** என்றும் பெயர்கள் உண்டாயின.

*" ஏடவிழ் அலங்கற்றிண்டோள் இபமுகத் தவுணன் மார்பில்*
*நீடிய குருதிச் செந்நீர் நீத்தமாய் ஒழுகும் வேலைப்*
*பாடுறவருங்கா னென்றிற் பரத்தலின் அதுவே செய்ய*
*காடெனப் பெயர்பெற் றின்னுங்காண்டக இருந்ததம்மா "*

*" மீண்டு செங்காட்டி லோர்சார் மேவிமெய்ஞ் ஞானத்தும்பர்*
*தாண்டவம் புரியுந்தாதை தன்னுருத்தாபித் தேத்திப்*
*பூண்ட பேரன்பிற் பூசை புரிந்தனன் புவியுளோர்க்குக்*
*காண்டகு மனையதானங் கணபதீச்சுரம தென்பர் "*

**(கந்தபுராணம்)**

*" கரிமுகத்தவுணற் காய்ந்து கரிமுகத் தண்ணல் பூஜை புரிசிவ நகரம் "* என்று திருவிளையாடல் கூறுகிறது. *வாளால் மகவரிந்தூட்டிய செயற்கரிய செயலைச் செய்த சிறுத்தொண்ட நாயனருக் கருள்செய்த தலம்.*

*" பொடிநுகருஞ் சிறுத்தொண்டற்கருள் செய்யும்*
*பொருட்டாகக் கடிநக்ராய் வீற்றிருந்தான்*
*கணபதீச்சுரத்தானே "*

**(திருஞானசம்பந்தர்)**

**வேறு பெயர்கள்:** இத்தலத்திற்கு மந்திரபுரி, செங்காடு, சத்தியபுரி, பிரமபுரி, ஆத்திவனம், பாஸ்கரபுரி, சமுத்திரபுரி, இந்திரபுரி முதலிய பெயர்களும் வழங்கும். சிவபெருமான் தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் சப்தகோடி மகாமந்திரங்களை அருளியதால் **மந்திரபுரி** என்றும் சத்தியாஷாட முனிவர் சிவபிரானைக்

குறித்துத் தவஞ் செய்தபொழுது தவத்தை அழித்த ரத்தநாமுகி, ரத்த பீஜன் என்னும் அசுரர்களைச் சிவ பெருமான் கொன்றபோது அவர்களுடைய இரத்தம் பூமியில் படிந்ததால் **செங்காடு** என்றும், சத்தியஷாட முனிவர் வழிபட்டுப் பூசித்ததால் **சத்தியபுரி** என்றும், பிரமன் வழிபட்டதால் **பிரமபுரி** என்றும், சிவபிரா னுடைய முடியைத் தேடிச்சென்ற – அன்ன வடிவங் கொண்ட பிரமனுக்காகத் தாழம்பூ பொய் சொன்ன தால், அப்பாவத்தைப் போக்கத் தாழம்பூ இத்தலத்தில் ஆத்திமரமாக முளைத்துத் தவம் செய்ததால் **ஆத்தி வனம்** என்றும், மகாசிவராத்திரி காலத்தில் சூரியன் பூஜித்து வழிபட்டதால் **பாஸ்கரபுரி** என்றும், சமுத்திர ராஜன் இத்தலத்தில் சிவலிங்கப் பிரதிட்டை செய்து வழிபட்டதால் **சமுத்திரபுரி** என்றும், இந்திரன் வழி பட்டதால் **இந்திரபுரி** என்றும் பெயர்கள் வழங்கு கின்றன.

*" மந்திரபுரி செங்காடு சத்தியபுரி மலரோன்*
*நந்திரபுரி ஆத்தியின்வனஞ் சுடர் தயங்கும்*
*முந்து பாஸ்கரபுரி சமுத்திரபுரி முடிசேர்*
*இந்திரன் மகிழ் கணபதீச்சரம் பெயரெட்டே. "*

(**தலபுராணம்**)

இத்தலத்தைச் சுற்றிலும் திருமருகல், திரு இராமனதீச்சரம், திருக்கண்ணபுரம், திருப்புகலூர் முதலிய தலங்கள் உள்ளன. இவ்வூர் பஞ்சாயத்து ஆட்சியில் நடைபெறுகிறது. ஜனத்தொகை சுமார் 874. தபால் பெட்டி மட்டும் உள்ளது. ஜில்லா போர்டைச் சேர்ந்த துவக்கப்பள்ளி உள்ளது. பக்கத்திலுள்ள திருக் கண்ணபுரத்தில் தபால் நிலையம் உள்ளது. இவ்வூருக்கு 3 மைல் தூரத்திலுள்ள ஏனங்குடியில் தபால் தந்தி நிலையங்களும், வைத்திய சாலையும், ஜில்லா போர்டைச் சேர்ந்த உயர்நிலைப் பள்ளியும் உள்ளன. கோயிலுக்கு மேற்கில் பசுமடம்

உள்ளது — காரைக்குடி முத்துப்பட்டணம் அ. ராம. நா. சிதம்பரம் செட்டியார் அவர்கள் குடும்பத்தாரால் நடத்தப்பட்டு வருகிறது. அக்னி மூலையில் நந்தவனம் உள்ளது. காரைக்குடி — முத்துப்பட்டணம் சு. சா. சண்முகநாதன் செட்டியாரால் நடத்தப்பட்டு வரு கிறது. காலை — மாலை அபிஷேகத்துக்குப் பால் அனுப்பப்பட்டு வருகிறது. ஊரில் பற்பல வகுப்பார் களுக்குரிய பல மடங்கள் உள்ளன. திருவிழாக் காலங்களில் வந்து தங்கி வழிபடுவர். ஊர் ஓர் கிராம மாக உள்ளது.

Thiruchengattankudi, 8 miles east by south of Nannilam. Population 874. It is known as the place where the sage Siruthonda offered his son to appease Siva's hunger. The sage was known for his generosity to Brahmins and Siva appearing before him as a brahmin beggar asked him to give him his son to eat. The sage did so and the boy was afterwards restored to life by the deity. There is a festival of some size here. The temple has the large endowment of 390 acres and is under the Tiruppugalur math."

(Tanjore District Gazetteers)

"This place is well known as the native place of saint Siruthonda who was a contemporary of Gnanasambanda who figures in the Periapuranam and who was present in the battle of Vatapi about 642. His idol is set up in Tanjore, saivite traditions connect it with god Ganapati's victory over a demon, thereby giving rise to the name of the shrine Ganapathichuram. It has been sung by Gnanasambanda and Appar." I., M. P.

(Inscriptions, Madras Presidency)



வாதாபி கணபதி சந்நிதி



திரு ஆத்திமரம்



சத்திய தீர்த்தம்

## 3. கோயிலின் அமைப்பு

மருத நிலமாகிய நன்செய் நிலங்களுக்கு நடுவில் கோயில் கிழக்குநோக்கியுள்ளது. கோயிலைச் சுற்றிலும் சோலைகளும், வாவிகளும் சூழ்ந்துள்ளன. இதை திருஞானசம்பந்தர் "சேல்புல்கு தண்வயல் சோலை சூழ்ந்த சீர்கொள் செங்காட்டங்குடி" என்று காட்டியுள்ளார். கோயிலுக்கு முன்னே 5 கண்களைக் கொண்ட பழய கோபுரம் பழுதடைந்து மூடப்பெற்றுப் பக்கத்திலுள்ள புது வாயில் வழியாகப் புறப்பாடு நடைபெறுகிறது. தெற்கில் ஓர் வாயிலும், மேற்கில் 3 கண்களையுடைய கோபுரமும் உள்ளன. கோபுரத்தை அடுத்து உள்ளே மடைப்பள்ளியும் யாகசாலையும் உள்ளன. முன் மண்டபத்தில் நந்தியும், கொடிமரமும் உள்ளன. பக்கத்தில் அலங்கார மண்டபமும், தெற்கு நோக்கிய அம்மன் கோயிலும் உள்ளன. அருகில் சமுத்திரராஜலிங்கம் தனிக் கோயிலாக உள்ளது. உள் கோபுரவாயில் 3 கண்களையுடையது. இருபுறமும் துவாரபாலகர்களின் வடிவங்கள் நின்ற கோலத்தில் உள்ளன. உள்வாயிலை அடுத்த பிராகாரத்தில் கீழ் புறத்தில் சிறுத்தொண்டர், திருவெண்காட்டு நங்கை, சீராளன், சந்தன நங்கை, பைரவர், சூரியன் முதலியோரின் சிலைகளும், தெற்கில் அறுபத்து மூவர், பிரமன், அர்த்தநாரி, நால்வர், சங்கநிதி பதுமநிதி முதலிய சிலைகளும், மேற்கில் வாதாபி கணபதி சம்பந்தர், சத்தியா ஷாடலிங்கம், முருகன், லட்சுமி முதலிய சந்நிதிகளும், வடக்கில் வசந்தமண்டபம், களஞ்சியம், நவதாண்டவமண்டபம், வாகன மண்டபம், சாமான் அறை முதலியனவும், நடராஜர் நவக்கிரகங்கள் சந்நிதிகளும் உள்ளன. உள் மண்டபத்தில் ஓர்

பால் ஆத்திமரம் உள்ளது. மூலவர் சந்நிதியும், உத்தராபதீஸ்வரர் சந்நிதியும் கிழக்கு நோக்கி யுள்ளன. உத்தராபதியாருக்குப் பக்கத்தில் மரகத லிங்கம் வெள்ளிப் பேழையில் உள்ளது. இச் சந்நிதிக்குப் பின் பூட்டப்பட்ட ஓர் சிறிய அறை உள்ளது. மூலலிங்கம் பள்ளத்திலுள்ளது. கோயிலில் மின்சார விளக்குகள் பொருத்தப்பெற்றுள்ளன. பெரிய மணி அடிக்கப்படுகிறது. கோயிலுக்குள்ளே இரண்டு பிராகாரங்களும் வெளி வீதியும் ஆக மூன்று பிராகாரங்கள் உள்ளன. கோயிலுக்கு வெளியே கிழக்கில் சத்தியபுட்கரணியும், வேண்டும் விநாயகர் கோயிலும் உள்ளன.

தென்மேற்கில் சூரியபுட்கரணியும், சிறுத்தொண் டர் கோயிலும் உள்ளன. சிறுத்தொண்டர் கோயிலின் வாயிலுக்குமேல் உத்தராபதியார், சிறுத்தொண்டர் முதலியோருடைய உருவங்கள் உள்ளன. உள்ளே உத்தராபதியார் உட்கார்ந்த கோலத்தில் உள்ளார். திருவெண்காட்டு நங்கையார் உணவு பரிமாறும் தோற்றத்தில் கிண்ணம் கரண்டியுடன் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மற்ரோர் பக்கத்தில் ஐயடி கள் காடவர்கோனின் உருவம் உள்ளது.

மேல வீதியில் பசுமடமும், அக்கினி மூலையில் நந்தவனமும் உள்ளன. கோயிலுக்குள்ளும், வெளி யிலும் பல விநாயர்களின் சிலைகள் உள்ளன. அக் காலத்தில் விநாயகர் தனது ஒற்றைக் கொம்பால் கஜமுகாசுரனை அழித்ததுபோலத் தற்போதும் கையில் ஒற்றைக்கொம்பை வைத்துக்கொண்டு புதிய அசுரர் களின் வரவை எதிர் நோக்கியிருப்பதுபோல் ஆங் காங்கு வீற்றிருக்கிருர். கோயிலின் விஸ்தீரணம்— சுற்றளவு கிழமேலடி சுமார் 408 அடி. தென்வடலடி சுமார் 204 அடி. கோயிலின் அமைப்பைக் காட்டும் படம் தனியே உள்ளது.



ஸ்ரீ உத்தராபதீஸ்வரர்
ஸ்ரீ கணபதீஸ்வரர்,
விமானங்கள்



காடவர்கோன்



சிறுத்தொண்டர் கோயில்

# 4. கோயிலின் படம்



தென்வடலடி 204
இழமேலடி 408
1
2
3
4
5
6
7
8
9
10
11
12
13
14
15
16
17 – 18
19
20
21
22
23
24
25
26
27
28
29
30
31
32
33
34
35
36
37
38
39
40
41
42
மே
தெ
வ
கி

## எண்களின் விளக்கம்

1. முன்கோபுரவாயில் (அடைப்பு)
2. புதுவாயில்
3. மடைப்பள்ளி
4. தெற்குவாயில்
5. மேற்குவாயில் 3 கண்கள்
6. யாகசாலை
7. முன்மண்டபம்
8. நந்தி
9. கொடிமரம்
10. உள்கோபுர வாயில் 3 கண்கள்
11. சிறுத்தொண்டர் முதலியோர்
12. அறுபத்துமூவர்
13. பிரமன். அர்த்தநாரீஸ்வரர்
14. நால்வர்
15. சங்கநிதி-பதுமநிதி
16. வாதாபிகணபதி
17. சம்பந்தர்-விநாயகர்
18. சத்தியாஷாடர் லிங்கம்
19. லிங்கம்
20. முருகன் சந்நிதி
21. லட்சுமி
22. வசந்தமண்டபம்
23. களஞ்சியம்
24. நவதாண்டவமண்டபம்
25. வாகனமண்டபம்
26. நடராஜர்
27. நவக்கிரகங்கள்
28. பைரவர்-சூரியன்
29. உள்மண்டபம்
30. ஆத்திமரம்
31. உத்தராபதியார் சந்நிதி
32. மூலவர் (கணபதீச்சரர்)
33. சண்டிகேஸ்வரர்
34. அலங்காரமண்டபம்
35. அம்மன் சந்நிதி
36. சமுத்திரராஜலிங்கம்
37. சண்டிகேஸ்வரி
38. சத்தியபுட்கரணி
39. சூரியபுட்கரணி
40. சிறுத்தொண்டர்கோயில்
41. தட்சிணாமூர்த்தி
42. அதிகார நந்தி



வாதாபி கணபதி

## 5. மூர்த்திகளின் பெயர்கள்

இத்தலத்தின் விநாயகர், வேண்டும் விநாயகர் எனப்படுவர். சிறுத்தொண்டர் வேண்டிக் கொண்டதால் இப்பெயர் அமைந்தது. மற்ரேர் விநாயகர் வாதாபி கணபதி, வாதாபி நகரிலிருந்து கோண்டுவரப் பெற்றதால் இப்பெயர் அமைந்தது, மூலவருக்குக் கணபதீச்சுரர் என்ற பெயர் வழங்குகிறது. கணபதியால் பிரதிட்டை செய்யப்பெற்றதால் ஏற்பட்டது. கோயிலுக்கும் கணபதீச்சரம் என வழங்குகிறது. இத்தலத்துக்கு ஏற்பட்ட வேறு பெயர்களால் பெருமானுக்கு, மந்திரபுரீசர், சத்தியபுரீசர், பிரமபுரீசர், ஆத்திவனநாதர், பாஸ்கரபுரீசர், சமுத்திரபுரீசர், இந்திரபுரீசர் முதலிய பெயர்களும் வழங்குகின்றன. கல்வெட்டுக்களில் கணபதீஸ்வரமுடைய நாயனர், கணபதீஸ்வரமுடைய மகாதேவர், பரமேஸ்வரமுடைய மகாதேவர், கணபதீஸ்வர முடையார், திருவாலங்காடுடைய நாயனர், சீராளதேவர் முதலிய பெயர்கள் வழங்குகின்றன. பைரவ வேடங்கொண்டவர் உத்தராபதீஸ்வரர் எனப்படுவர். வட நாட்டிலிருந்து வந்த காரணத்தால் இப்பெயர் ஏற்பட்டது. கல்வெட்டில் உத்தராபதி நாயகர் என்று காணப்படுகிறது. அம்மன் பெயர் வாய்த்ததிருக்குழலி நங்கை என்பது. வடமொழியில் சூளிகாம்பாள் எனப்படும். "வாய்த்த திருகுகுழல்உமை நங்கை" என்று திருநாவுக்கரசர் பாடியுள்ளார். அடுத்துள்ள பல தலங்களில் அம்மன் பெயர் குழலி என்ற பெயர்களில் வழங்கும். அம்பரில் வம்பவனக்குழலி என்றும், புகலூரில் கருந்தார் குழலி என்றும், ராம நந்தீச்சரத்தில் சரியார்குழலி என்றும், மருகலில் வண்டார் குழலி என்றும் பெயர்கள் வழங்குகின்றன. காட்டாத்திமரம் தல விருட்சமாக உள்ளது. உத்தராபதீஸ்வரர் சந்நிதிக்கு நேராக உள்ளது. தாழம்பூவே ஆத்திமரமாகத் தோன்றியதாக ஐதீகம். அடிமரம் தணிந்து சந்நிதியை மறைக்காதபடி வளர்ந்துள்ளது.

## 6. தீர்த்தங்கள்

இத்தலத்தில் பல தீர்த்தங்கள் உள்ளன.

**சத்திய தீர்த்தம்** : சிவபெருமான் தனது சூலத்தைப் பூமியில் ஊன்றி உண்டாக்கியதால் சூல தீர்த்தம் என்றும் பெயர் பெறும். இது கோயிலுக்கு அக்கினி மூலையில் உள்ளது.

**சூரிய தீர்த்தம்** : சூரியன் பெயரால் ஏற்பட்டது. கோயிலுக்குத் தென்மேற்கில் உள்ளது. கார்த்திகை மாதம் ஞாயிற்றுக்கிழமைகளில் இதில் மூழ்கி வழி பட்டால் சகல ரோகங்களும் நிவர்த்தியாகும். இவை களையல்லாமல் கிழக்கில் இந்திர தீர்த்தமும், தெற்கில் யமதீர்த்தமும், தென்கிழக்கில் அக்னி தீர்த்தமும், மேற்கில் வருண தீர்த்தமும், வடமேற்கில் வாயு தீர்த்தமும், சந்திரபுட்கரணி தீர்த்தமும் உள்ளன. திருமருகலில் சீராளன் கல்விபயின்ற இடத்திற்குப் பின்னல் சீராளன் குளம் என்ற தீர்த்தம் உள்ளது. இவைகளில் சித்திரைப் பரணி முதலிய விசேட நாட் களில் நீராடிப் பெருமானை வழிபடுவோர் பாவங்கள் நீங்கிப் புண்ணியமும் சகல சித்திகளும் பெறுவர்.

*'' அத்தன் இறைவன் அமலேசன் அமராலயத்தின்*
*அருகுறு நீர்*
*சுத்தம சுத்தமாயினு நற்சுரர்கள் பரவுகங்கை யென்றே*
*புத்திபுரிந்தங்கத்தடத்தின் புனலுள்படிவோர் யாரேனும்*
*சத்தசனனத்துறு பாவம் தணந்து சிறந்து நயங்குவரே''*

(சிவபுண்ணியத் தெளிவு)

*'' அத்தடம் மூழ்கினூர்க் கலகை நோயற*
*மெத்திய பகையற வினையின் வேரறப்*
*புத்திர செல்வமும் புகழும் வீரமும்*
*சித்தியும் முத்தியும் சேர்தல் திண்ணமே ''*

(செவ்வந்திப் புராணம்)

*'' மூர்த்தி தலந்தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர்*
*வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே ''*

(தாயுமானவர்)

## 7. தலப்பெருமைகள்

இத்தலம் மிகவும் பழமையானது. தேவாரப் பாடல்பெற்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றிலும் சிறப்புடையது. கணபதி கஜமுகாசுரனைக் கொன்று, பெருமானைப் பிரதிட்டை செய்து வழிபட்டதால், கணபதீச்சரம் என்னும் பெயரைப் பெற்றது. மூல லிங்கம் மிகவும் பள்ளத்திலுள்ளது. மந்திரபுரி முதலிய பல பெயர்களைப் பெற்றது. பல தீர்த்தங்களையுடையது. சத்தியாஷாடமுனிவர், சூரியன், பிரமன், வருணன். இந்திரன் முதலியோர் வழிபட்டது. வாளால் மகவரிந்தூட்டிய — செயற்கருஞ் செயலைச் செய்த சிறுத்தொண்டர்க்குப் பெருமான் தேவியோடும், முருகப்பிரானோடும் காட்சி கொடுத்து அருள் செய்த இடம். இவருடைய பெருமையைத் திருஞானசம்பந்தர் தம் பதிகத்தில் அமைத்துப் பாடியுள்ளார். இயற்கை வளங்களைப் பெற்ற பதி, வடக்கேயிருந்து பைரவராய்த் தோன்றிவந்த உத்தராபதியார் எழுந்தருளிய தலம். பல சிற்பங்களையும், நவ தாண்டவ மூர்த்திகளையும் உடையது. பரஞ்சோதி என்னும் சிறுத்தொண்டரால் வாதாபியினின்றும் கொண்டுவரப்பெற்ற வாதாபி கணபதியைப் பெற்றது. சிறுத்தொண்டர், அவருடைய தேவியார், புதல்வர் முதலியோர் முத்திபெற்ற தலம், அவர்களுடைய உருவச்சிலைகள் கோயிலில் உள்ளன. ஒரு சமயம் தாழம்பூ பிரமனுக்காகப் பொய் சொன்னதால் அப் பாவத்தைப் போக்கிக்கொள்ள இத்தலத்தில் ஆத்தி மரமாய் முளைத்த பெருமையுடையது. இக்கோயிலில் குரு, லிங்க, சங்கம வடிவங்களாக மூர்த்திகள் அமைந்துள்ளார்கள். ஸ்ரீ தட்சிணாமூர்த்தி குருவாகவும், மூலவர் லிங்கமாகவும், உத்தராபதியார் சங்கமராகவும் அமர்ந்திருக்கிறார்கள். இத்தலத்தில் அடியார்களுக்கு அமுதளித்தால் மிகவும் புண்ணியமுண்டு என்று சொல்லப்படுகிறது.

*" இத்தலந் தனிலொருவருக் கமுதுணவீந்தோர்*
*உற்ற பேறினையாவரே எங்ஙன முரைப்பார்*
*முத்து நேருமோர் சோற்றினுக் கெம்பிரான் முடிவில்*
*அத்தனைப்பத நான்முகன் கற்பமே யளிக்கும் "*

(தலபுராணம்)

ஊரைச்சுற்றிலும் பல கணபதிச் சிலைகள் ஆங்காங்கு உள்ளன. நகர வாழ்க்கையில் மன அமைதி பெறமுடியாமல் அல்லற்படும் மக்களுக்கு மன அமைதியை உண்டாக்கும் இடம். பல கல்வெட்டுக்களையுடையது. பற்பல அரசர்கள் காலத்தில் பல அறங்கள் செய்யப்பட்டுள்ளன. உத்தராபதியார் ஐப்பசிப் பரணி நாளில் உணவு கேட்டுச் சித்திரைப் பரணி நாளில் உணவு கொள்ளப் புறப்பட்டுக் காட்சி கொடுத்தது. பெருமானுக்குப் பல பெயர்கள் வழங்குகின்றன.

இலக்கியத் துறையிலும் இத்தலம் மிகவும் சிறப்புடையது. இத்தலத்தைக் குறித்துத் திருஞானசம்பந்தர் பாடிய தேவாரப் பதிகங்களும், திருநாவுக்கரசர் பாடிய திருத்தாண்டகமும், சிறுத்தொண்டர் வரலாற்றைக் கூறும் பெரிய புராணப் பாடல்களும் உள்ளன. இத்தலத்தின் சிறப்புக்களைக் கூறும் புராணம் ஒன்றுண்டு. மேலும் இத்தலத்தைக் குறித்தும், சிறுத்தொண்டரைக் குறித்தும் பாடப்பெற்ற பல தனிப்பாடல்கள் உள்ளன. அருணகிரியாரால் பாடப்பெற்ற திருப்புகழ் உண்டு.

திருஞானசம்பந்தர் தமது பதிகங்களில் இத்தலத்தின் இயற்கை வளங்களையும், பெருமானை வழிபடும் முறைகளையும், திருவிழாச் சிறப்புக்களையும் பலபடியாகப் பாராட்டிப் பாடியுள்ளார். பின் வருந் தொடர்களில் திருச்செங்காட்டங்குடியின் சிறப்புக்களைக் காட்டுகிறார்.

*" சிறை கொண்ட வண்டறையுஞ் செங்காட்டங்குடி,
செங்கயல்பாய் வயலுடுத்த செங்காட்டங்குடி,
சேலினுர் வயல்புடைசூழ் செங்காட்டங்குடி,
செய்யினுர் தண்கழனிச் செங்காட்டங்குடி, சிறை
யிலங்கு புனற்படப்பைச் செங்காட்டங்குடி,
செங்கயலார் புனற் செல்வம் மல்குசீர் கொள்செங்
காட்டங்குடி, செய்தவ நான்மறை யோர்கள்
ஏத்துஞ்சீர் செங்காட்டங்குடி, சேல்புல்கு
தண்வயற் சோலை சூழ்ந்த சீர்ச்செங்காட்டங்குடி,
சேடகமா மலர் சோலைசூழ்ந்த சீர்ச் செங்காட்டங்குடி
சினைகெழு தண்வயற் சோலைசூழ்ந்த சீர்கொள்
செங்காட்டங்குடி,
தேமரு பூம்பொழிற் சோலை சூழ்ந்த
சீர்ச்செங்காட்டங்குடி,
சேண்தங்கு மாமலர்ச் சோலைசூழ்ந்த சீர்ச்செங்
காட்டங்குடி,
செந்தமிழோர்கள் பரவியேத்தும்
சீர்ச்செங்காட்டங்குடி,
சேலுங்கயலுந் திளைத்தகண்ணுர் சீர்கொள்
செங்காட்டங்குடி "*

என்பன. திருவிழாவின் சிறப்பை "வாரேற்ற பறையொலியும் சங்கொலியும் வந்தியம்ப, ஊரேற்ற செல்வத்தோடோங்கியசீர் விழவோவாச் சீரேற்றம் உடைத்தாய செங்காட்டங்குடி" என்று காட்டியுள்ளார்.

கணபதீச்சரத்தில் எழுந்தருளிய பெருமானின் இயல்புகளைப் பல தொடர்களில் காட்டுகிருர். "கறை கொண்ட கண்டத்தான், காரேற்ற கொன்றையான், கரந்தையான், வெண்ணீற்ருன், கங்கைசேர் வார்சடையான், காலினுற் கூற்றுதைத்தான், மதியக் கண்ணியான், கண்ணுதலான், கையினுர் கூரெரியான், காடுடையான், நாடுடையான், சிற்றம்பலத்தான், கானூரான், கழுமலத்தான், வெங்காட்டுள் அனலேந்தி விளையாடும் பெருமான், இன்னமுதன்,

வட்டவார் சடையான், வானமருஞ் சடையான், நீருலாஞ் சடையான், கறைக்கண்டன், பேரிாளன், பெருமான் பிறப்பிலி, வெந்த நீறணி மார்பன்," முதலியன.

## 8. திருப்பணிகள்

முன்னோர்கள் ஏற்படுத்திய கோயில்களுக்கு எவ்வித தீங்கும் நேராதபடி பாதுகாத்து அவ்வப் பொழுது ஆவன செய்யவேண்டும். புதியதோர் கோயிலை அமைப்பதைப் பார்க்கிலும் பழமையான கோயிலைப் புதுப்பித்தல் மிக்க புண்ணியத்தைத் தரும் என்பர். "புதிதுறப் பணிகள் வேறு புரிவதின் பழய தொன்மை விதியுளி புதுக்குவோர்க்கு மிக்க புண்ணியந்தான் எய்தும்" என்று ஆன்றோர் கூறி யுள்ளார்.

*" மாதவர் மடங்களாதி வரதன் மந்திரங்களாதி*
*நாதமாமிலிங்கமாதி நளின புட்கரணியாதி*
*சேதமுற்றிடின் முன்போல் செய்பவர்க் குறுபலன்தான்*
*ஓதுமுன் செய்தோர் தம்மில் ஆயிரங்குணித மோங்கும் "*

(சிவபுண்ணியத் தெளிவு)

ஆதியில் ஐயடிகள் காடவர்கோனும், குலோத் துங்க சோழனும் கோயில் திருப்பணி செய்ததாகச் சொல்லப்படுகிறது. பிற்காலத்தில் பசுமடமும், நந்த வனமும் காரைக்குடி முத்துப்பட்டணம் தன வைசியர் களால் அமைக்கப்பெற்று அபிஷேகத்துக்குப் பாலும், பூஜைக்கு மலர்களும் அனுப்பப்படுகின்றன. முன்னே யுள்ள கருங்கல் மண்டபம் காரைக்குடி தன வைசியர் களால் திருப்பணி செய்யப்பெற்றது. 1950-ல் மேல வீதியிலுள்ள சிறுத்தொண்டர் கோயிலும், சத்திய புட்கரணிக் குளமும் கருப்பூர் கற்பகத்தாச்சி யாரால் திருப்பணி செய்யப்பட்டு 31—1—50-ல்

கும்பாபிஷேகம் நடைபெற்றது. மேனுங்குடி திரு. மருதவாணம் பிள்ளை அவர்கள் டிரஸ்டியாயிருந்த காலத்தில் 1953-ல் கோயில் நிதியிலிருந்து சுமார் 50550 ரூபாய் செலவு செய்து உள்மதில், மண்டபம் முதலியவை பழுதுபார்க்கப்பெற்றுத் திருப்பணிகள் நிறைவேறி 1-5-53-ல் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் நடைபெற்றது. கோயிலுக்குத் தென்கிழக்கிலுள்ள வேண்டும்விநாயகர் கோயில், சிதம்பரஞ் செட்டியாரால் திருப்பணி செய்யப்பெற்று விக்கிரம—ஐப்பசி 21-ந் தேதி கும்பாபிஷேகம் நடைபெற்றது. தற்கால டிரஸ்டிகளின் பெருமுயற்சியால் 1955-ல் பிடாரி, மாரியம்மன், காளி, ஐயனர் முதலிய கோயில்களும், மடைப்பள்ளியும் சுமார் 6500 செலவு செய்து திருப்பணிகள் நிறைவேறி 12—12—55-ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. சமீபத்தில் கோயிலில் மின்சார விளக்குகள் பொருத்தப்பெற்றன. மிகப் பழயதான முன் கோபுரம் பழுதாயுள்ளது. திருப்பணி செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. தற்போது கோபுரத்திலுள்ள செடிகள் அகற்றப்பட்டு மருந்து சேர்க்கப் பெற்றது. மேலும் பல திருப்பணிகள் செய்யவேண்டியிருப்பதால் அவைகளை நிறைவேற்றிவைக்கும் வகையில் சிவநேசச் செல்வர்கள் உதவி செய்வார்களாக.

## 9. சிற்பங்கள்

கோயிலும், மண்டபங்களும், மூல மூர்த்திகளும், உற்சவ மூர்த்திகளும் நல்ல சிற்பத்திறனைக் கொண்டு விளங்குகின்றன. வாதாபி கணபதி கோயிலிலும், சுவாமி கோயிலிலும் பல கல்வெட்டுக்கள் உள்ளன. வாதாபி கணபதியின் தோற்றம், தென்னாட்டுக் கணபதிகளைப்போல் இல்லாமல் புதுமையாய் உள்ளது. உட்கார்ந்து சம்மணம் போட்டுக்கொண்டு, இரு கைகளையும் தொடைகளில் வைத்துக்கொண்

டுள்ளது. துதிக்கை இடதுபுறம் சுழியுள்ளது, உள் வாயிலை அடுத்து இடது பக்கத்தில் சிறுத்தொண்டர், திருவெண்காட்டு நங்கை, சீராளன், சந்தன நங்கை ஆகியோரின் உருவச்சிலைகள் உள்ளன. இவர்கள் சிவபெருமானோடு கைலை செல்வதைக் காட்டும் சிற்பங்கள் சுவாமி கோயில் வடசுவரில் உள்ளன. விமானத்தைச் சுற்றியுள்ள நீராழி மண்டபம், வரிசை யான தூண்களால் அமைக்கப்பெற்றுள்ளது. சத்திய ஷாட முனிவர் பூஜிப்பதும், கணபதி வழிபடுவது மாகிய சிற்பங்கள் தூண்களில் காட்டப்பெற்றுள்ளன. சங்க நிதி, பதுமநிதிச் செல்வங்கள் மூர்த்திகள் வடிவாக உள்ளன. கொடிமரத்தின் (துவஜஸ்தம்பம்) நான்கு பக்கங்களிலும் விநாயகர், முருகன், தக்ஷிண மூர்த்தி, சிவபெருமான் முதலிய உருவங்கள் அமைக் கப்பட்டுள்ளன. வாதாபி கணபதிக்கும், உத்தராபதி யார்க்கும், அம்மனுக்கும் இரண்டே கைகள் உள்ளன. உலோகத்தாற் செய்த பாவை விளக்கு உள்ளது. உத்தராபதியார் சந்நிதியில் 5 கிளைக் குத்துவிளக்கு உள்ளது. மூலவராகிய கணபதீச்சுரர் மண்டபத்தில் டிண்டி முண்டி என்ற துவாரபாலகர்கள் வக்கிர தந்தத் துடன் இருபுறமும் நிற்கின்றனர். மேல் உள்ள கருங்கல் கொடுங்கையில் பல பூதங்கள் பல வாத்தியங் களை வாசித்துக் கொண்டிருக்கின்றன. இவை உத்தராபதியாரின் நடனத்துக்குப் பக்கவாத்தியங்கள் போலும். "பாடும் பறண்டையும் ஆந்தையும் ஆர்ப்பப் பரந்து பல்பேய் கூடி முழவக்குவிகவிழ் கொட்ட— ஆடுந்திருவடிகாண்" என்றும், "பேய்க்கணத் தோடிணங்கி நின்றாடின இன்னம்பரான்றன் இணையடியே" என்றும் நாவுக்கரசர் பாடிய பாடல் வரிகளை இந்தச் சிற்பங்கள் நினைப்பூட்டுகின்றன. உத்தராபதியார் மண்டபத்தில் தூண்களின் கீழ் சிங்கத்தின் உருவங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. கோயிலுக்கு வெளியிலுள்ள சத்திய புட்கரணி சம சதுரமாகப் புதுப்பிக்கப் பெற்றுள்ளது.

# நவதாண்டவ மூர்த்திகள்



1. புஜங்கலளிதமூர்த்தி



2. கஜஸம்ஹாரமூர்த்தி



3. ஊர்த்துவ தாண்டவமூர்த்தி

## 10. நவதாண்டவ மூர்த்திகள்

இக்கோயிலில் நவதாண்டவ மண்டபத்தில் புஜங்கலளிதர், கஜசம்மாரர், ஊர்த்துவ தாண்டவர், காலசம்மாரர், கங்காளர், தாருகாவன பிக்ஷாடனர், திரிபுரசம்மாரர், பைரவர், என்னும் மூர்த்திகள், மூலவராகிய உத்தராபதியார் என்னும் ஒன்பது தாண்டவ மூர்த்திகளின் வடிவங்கள் மிகவும் சிற்பம் பொருந்தியனவாய் அமைந்துள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் தத்துவத்தை அறிவிக்கும்.

1. **புஜங்கலளிதர்** : இவர் பாம்புகளை அழகாகப் பூண்டு விளங்குபவர். தாருகாவனத்து முனிவர்கள் ஓர் யாகத்தின் மூலம் வரவழைத்துப் பெருமான் மீது ஏவிய பாம்புகளை ஆபரணமாகப் பூண்டு நடனமாடியவர். பாம்பாபரணர் எனப்படுவர்.

*" புள்ளிவரி நாகம் பூண்டான் றன்னை "*

—(அப்பர்)

*" சொல்லும் ஐந்தலை அரவசைத்து அசைந்தனை*

—(நக்கீரர்)

2. **கஜசம்மாரர்** : தேவர்-முனிவர் முதலியோரை வருந்திவந்த யானை வடிவங்கொண்ட கஜாசுரனைக் கொன்று யானையின் தோலைப் போர்த்தவர். சிவனார் செய்த அட்ட வீரங்களில் ஒன்று. இது வைப்புத்தலமாகிய வழுவூரில் நிகழ்ந்ததாகக் கூறுவர்.

*" மாலாகி மதமிக்க களிறுதன்னை, வதைசெய்து*
*மற்றதனின் உரிவை கொண்டு*
*மேலாலுங் கீழாலுந் தோன்றுவண்ணம்*
*வெம்புலால் கைகலக்க மெய்போர்த்தானே "*

(அப்பர்)

3. **ஊர்த்துவ தாண்டவர்** : சிவபெருமான் காளியுடன் நடனஞ் செய்தபோது, ஒரு காலை மேலே

தூக்கியும், ஓர் காலைக் கீழே இருத்தியும் நடனம் ஆடி வென்ற கோலம்.

*" வீரங் கொடுத்தெறியு மாகாளி கோபந்தவிர எடுத்த*
*நடத்தியல்பு போற்றி "*

*" தாளொன்றாற் பாதாள மூடுருவத் தண்விசும்பில்*
*தாளொன்றால் அண்டங் கடந்துருவித்—தோளொன்றால்*
*திக்கனைத்தும் போர்க்கும் திறற்காளி காளத்தி*
*நக்கனைத்தான் கண்ட நடம் "*

(நக்கீரர்)

4. **காலசம்மாரர்** : பெருமானை வழிபட்ட மார்க்கண்டேயனை, யமன் பாசக்கயிற்றை வீசிப் பிணிக்க முயன்றபோது பெருமான் லிங்கத்தினின்றும் தோன்றி யமனை உதைத்துக் கொன்ற கோலம். இது நிகழ்ந்த இடம் திருக்கடவூர், இதுவும் அட்ட வீரங்களில் ஒன்று.

*" மாலினைத் தவிர நின்ற மார்க்கண்டேயருக்காக அன்று*
*காலனை உதைப்பர் போலுங் கடவூர் வீரட்டனாரே "*

(அப்பர்)

5. **கங்காளர்** : சிவபெருமான் பிற தேவர்களுடைய முதுகெலும்பைத் தரித்தருளித்தாம் அழியாதவர் என்பதைத் தோற்றுவிக்கும் கோலம்.

*" கங்காளர் கயிலாய மலையாளர் கானப்பேராளர் "*

(சம்பந்தர்)

6. **தாருகாவன பிக்ஷாடனர்** : தாருகாவனத்து முனிவர்களுக்கு நல்லுணர்வுண்டாக்கப் பிரம கபாலங் கைக்கொண்டு பலியேற்கச் சென்ற கோலம்.

*" காரார் கமழ் கொன்றைக் கண்ணி சூடிக்*
*கபாலங்கை யேந்திக் கணங்கள்பாட*
*ஊரார் இடும்பிச்சை கொண்டுழலும்*
*உத்தம ராய்நின்ற ஒருவனார் "*

(அப்பர்)



4. காலசம்ஹாரமூர்த்தி



5. கங்காளமூர்த்தி



6. பிக்ஷாடனமூர்த்தி



7. திரிபுரசம்ஹாரமூர்த்தி



8. பைரவமூர்த்தி

7. **திரிபுர சம்மாரர்** : பெருமான் மேருமலையை வில்லாகவும், பாம்பை நாணாகவும், கொண்டு சென்று பொன், வெள்ளி இரும்பாகிய மூன்று கோட்டைகளை யுடைய அசுரர்களையும், அவர்கள் இருப்பிடங்களையும் சிரித்தெரித்த கோலம். அட்ட வீரங்களில் ஒன்று. திருவதிகையில் நிகழ்ந்ததாகக் கூறுவர். மும்மலங்களாகிய முப்புரத்தை அழித்ததாகவும் கூறப்படும்.

*"திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட போரானை"*
*"திரியும் மூவெயில் தீயெழச் சிலைவாங்கி நின்றவனே"*

(அப்பர்)

8. **பைரவர்** : பெருமான் பைரவ மூர்த்தியாய்த் தோன்றிப் பிரமனுடைய ஐந்து தலைகளில் ஒன்றை நகத்தாற் கிள்ளிக் கபாலத்தைக் கையிலேந்திய கோலம்.

*" பிரமன்தன் சிரமரிந்த பெரியோய் போற்றி "*

(அப்பர்)

9. **உத்தராபதியார்** : இவரே கோயிலின் பிரதம மூர்த்தியாவர். விடையவரே வைரவராய்த் தோன்றிச் சிறுத்தொண்டருக்கு அருளவந்த மூர்த்தி, தரிசித்தோரை வசீகரிக்கச் செய்து பரவசமாக்குந் தோற்றம். சிறந்த சிற்பம் அமைந்தது. வலக்கரத்தில் தமருகமும், இடக்கையில் கபாலமும், தோளில் மூவிலைச் சூலமும் கொண்டு, முகத்தில் அருளும், புன்னகையுங்கொண்டு இடுப்பு வளைந்து, இரு பாதங்களையும் பூமியில் ஊன்றிச் சமபாத நடனக்காட்சி அருளும் திருக்கோலம். இக்கோலத்தில் பஞ்சகிருத்தியமாகிய ஐந்தொழிலும் அடங்கியுள்ளன. தமருகமாகிய உடுக்கையால் தோற்றமும், சீராளனை அழித்தலால் அழிப்பும், மீண்டும் உயிர்ப்பித்தலால் காத்தலும், சிறுத்தொண்டர் முதலியோர்க்குத் தாம் மறைந்து அருளியதால் மறைத்தலும், அருளலும் அடங்கியுள்ளன. இம்மூர்த்தி ஆண்டில் மூன்றுமுறை புறப்படும்.

“ அயன் கபாலந்தரித்த இடத்திருக்கையால் அணைத்த
வயங்கொளி மூவிலைச் சூலம் மணித்திருத்தோள் *
மிசைப்பொலியத்
தயங்குசுடர் வலத்திருக்கைத் தமருகத்தின் ஒலிதழைப்பப்
பயன் தவத்தால் பெறும்புவியும் பாததாமரை சூட ”

(பெரிய புராணம்)

“ விரித்தபல் கதிர் கொள்சூலம் வெடிபடு தமருகங்கை
தரித்ததோர் கோலகாலப் பயிரவனாகி வேழம்
உரித்துமை யஞ்சக்கண்டு ஒண்திரு மணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே. ”

(திருநாவுக்கரசர்)

*(புஜங்கலலிதர் முதலாக உள்ள நவதாண்டவ மூர்த்திகள், வாதாபி கணபதி, சிறுத்தொண்டர் முதலியோருடைய நிழற் படங்கள் (Photos) இப் புத்தகத்தில் சேர்க்கப்பெற்றுள்ளன.)

## 11. தினப்பூஜையும் திருவிழாக்களும்

கோயில்களில் பூஜை முதலியன நடைபெறாமல் தடை ஏற்பட்டால் நாட்டுக்குத் தீமை உண்டாகும் என்பர்.

“ கண்ணுதற் பெருமான்மேய கோயிலிற் காலந்தோறும்
நண்ணு நற்பூசையாதி விதிப்படி நடத்தல் வேண்டும்
பண்ணுதல் தவறுமாயின் பார்த்திபன்தனக்கும் பாரில்
அண்ணு பல்லுயிர்க்குந் தீமை அணுகுதல் சரதமாமே ”

(மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை)

இக்கோயிலில் தினந்தோறும் காலை, உச்சி, மாலை, 2ங் காலம், இரவு ஆகிய ஐந்து காலங்களிலும்

---

* போட்டோ படங்களை மாயூரம் கெம்பு போட்டோ சர்வீஸ்காரரும், பிளாக்குகளை திருச்சி வீனஸ் ஆர்ட்ஸ் காரரும் தயாரித்துக் கொடுத்தார்கள்.



9. ஸ்ரீ உத்தராபதீஸ்வரர்

அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. காலையிலும் மாலையிலும் பசுமடத்திலிருந்து பால் அனுப்பப்படுகிறது. மரகதவிடங்கருக்குக் காலையிலும் மாலையிலும் அபிஷேகம் நடைபெறும். உத்தராபதீஸ்வரருக்குத் தினம் பால் நைவேத்தியம். அப்போது சுத்தமத்தளமும், சின்னமும் வாசிக்கப்பெறும். உத்தராபதியார்க்கு ஓர் ஆண்டில் 10 அபிஷேகங்கள் ஐப்பசிப்பரணி, சித்திரைப்பரணி, சித்திரை மாதப் பிறப்பு, ஆடி மாதப்பிறப்பு, ஐப்பசி மாதப்பிறப்பு, தை மாதப்பிறப்பு முதலிய நாட்களில் நடைபெறும், திருவோண நாளில் காடவர்கோனுக்குத் தரிசனக் காட்சி. பூஜை நேரங்களில் பெரிய மணி அடிக்கப் பெறும். மாதப்பரணி நாட்களில் விடங்கருக்கு அபிஷேகமும், குழித்தளிகை ஆராதனைகளும் நிகழும். வெள்ளிக்கிழமைகளில் அம்மன் புறப்பாடும், கார்த்திகை நாட்களில் முருகனுக்கு அபிஷேகமும் புறப்பாடும் நடைபெறும்.

மேலும் கோயிலில் பல கட்டளைகள் நிகழ்ந்து வருகின்றன. உச்சிக்காலப் பூஜையில் தேசாந்திரி கட்டளையுடன் தயிரன்னமும் வழங்கப்பட்டுவருகிறது. 2ங் காலத்தில் தேசாந்திரிக் கட்டளையும், பிரதோஷக் கட்டளையும், சுவாமி அம்மன்களுக்கு அகண்ட தீபக் கட்டளையும் அவ்வப்போது தனிப்பட்ட உபயக்காரர்களால் நடைபெற்று வருகின்றன. அந்தந்தக் காலங்களில் சென்று வழிபட்டால் மிகவும் புண்ணியம் உண்டு.

*" காலைதொழ அற்றை வினைக்கட்டகலும் கட்டுச்சி*
*வேலை தொழ இப்பிறப்பில் வெந்துயர்போம்-மாலையினில்*
*வந்து சிவன்தாளை வந்தித்தால் ஏழ்பிறப்பின்*
*வெந்துயர மெல்லாம் விடும் "*

(சிவதரிசன மகத்துவம்)

*" காலையில் தரிசித்தோர்க்குக் கருகிராப் பாவமுச்சி*
*வேலையில் தரிசித்தோர்க்குப் பிறந்தநாள்முதல்*
*வெஃபாவம்*
*மாலையில் தரிசித்தோருக் கெழுபவப்பாவம் மாயும்*
*ஆலயத் தடைந்து சூழுற்றன்புமிக் குருகித் தாழ்ந்தே "*

**(தனியூர்ப் புராணம்)**

ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் பிரம்மோற்சவம்—பெருவிழா நடைபெறும். சதய நாளில் கொடி ஏறிப் பத்து நாட்கள் வரையில் நடைபெறும். 2-ம் நாள் பூப்பல்லக்கிலும், 3-ம் நாள் பூதவாகனத்திலும், 4-ம் நாள் யானை வாகனத்திலும், 5-ம் நாள் ரிஷப வாகனத்திலும் மூர்த்திகள் அமர்ந்து காட்சி கொடுப்பர்.

6-ம் நாள் பரணியில் பிக்ஷாடன உற்சவம்—அமுது படையல் விழா நடைபெறும். அப்போது காலையில் உத்தராபதீஸ்வரர், வடபதியாகிய கைலையினின்றும் புறப்பட்டுக் கஞ்சுகம், சூலம், கபாலம், தமருகம், பொக்கணம், மாணிக்கக்கந்தை, வட்டவார் சடை முதலிய கோலத்துடன் வெள்ளை சாத்தி எழுந்தருள்வார். அப்போது நட்டுமுட்டு, சிலம்புவாத்தியங்கள் முழங்கப்பெறும். பகல் நேரத்தில் உத்தராபதியார் திருவமுது கேட்பதற்குச் சிறுத்தொண்டர் மனைக்கு எழுந்தருளிப் பிறகு திருவாத்திமரத்தின் கீழ் வீற்றிருப்பார். இரவில் திருவமுது செய்தற் பொருட்டு சிறுத்தொண்டர் மடத்திற்கு மீண்டும் எழுந்தருள்வர். அப்போது உத்தராபதியார் மறைந்து ரிஷப வாகனத்தில் எழுந்தருளிச் சிறுத்தொண்டர் முதலியோருக்குக் காட்சி கொடுத்து அவர்களை முத்தி உலகுக்கு உடனழைத்துச் செல்லுதல். இந்த விழாவே இத்தலத்தில் நிகழும் முக்கிய விழாவாகும்.

7-ம் நாள் புஷ்ப விமானத்திலும், 8-ம் நாள் குதிரை வாகனத்திலும் பெருமான் அமர்ந்து காட்சி

தருவர். 9-ம் நாள் தேரோட்டமும், 10-ம் நாள் தீர்த்தவாரியும் நடைபெறும். 11-ம் நாள் சண்டிகேஸ்வரர் விழாவும், மறுநாள் விடையாத்தி விழாவும் நிகழும். திருவோண நாளில் இரவு நேரத்தில் காடவர் மகாராஜாவுக்கு காட்சி கொடுப்பதாகிய சண்பகவிழா நிகழும்.

**மாத விழாக்கள் :** சித்திரை – ஆடி–ஐப்பசி – தை மாதப்பிறப்பு நாட்களில் உத்தராபதியார்க்கு அபிஷேகம் நடைபெறும். ஆனியில் நடராஜருக்கு அபிஷேகமும், ஆடியில் பூர விழாவும், ஆவணி மூலத்தில் பிட்டு விழாவும், புரட்டாசியில் நவராத்திரி விழாவும், விஜயதசமியில் அம்பு போடுதலும் நடைபெறும். ஐப்பசி பரணி நாளில் உத்தராபதியார் புறப்பட்டுக் காட்சி கொடுப்பர். கார்த்திகை மாதம் ஞாயிற்றுக்கிழமைகளில் சந்திரசேகரர் புறப்பாடும், சோமவாரங்களில் தீபமும், கார்த்திகை நாளில் பனை ஓலைகளால் அமைத்த சுடலையும் நடைபெறும். மார்கழி மாதத்தில் பூர்வபட்சம் — சதயமும் சஷ்டியும் கூடிய நாளில் கணபதி, பெருமானைப் பூஜித்து வழிபடும் விழா நடைபெறும். மேலும் இம்மாதத்தில் தனுர் பூஜையும், (விடியற்கால ஆராதனை), மகாவிதிபாத ஆராதனையும், திருவாதிரை நாளில் நடராஜருக்கு அபிஷேகமும் புறப்பாடும் நடைபெறும். இம்மாதத்தில் திருவெம்பாவை – திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் ஒலிபரப்பியின் மூலம் பாராயணம் செய்யப்படும். தைமாதம் பொங்கல் நாளில் சோமாஸ்கந்தர் புறப்படும். மாட்டுப்பொங்கல் நாளில் சுப்பிரமணியர் குதிரைவாகனத்தில் புறப்பட்டு வேடுபறி நடைபெறும். மாசி மாதம் சிவராத்திரி நாளில் இரவில் நான்கு காலங்களிலும் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். பங்குனிப் பரணி நாளில் அபிஷேக வழிபாடுகள் நிகழும். இந்த ஆண்டு மார்கழியில் ஸ்ரீ உத்தராபதீஸ்வரருக்குப் புதியதாக லட்சார்ச்சனை நடைபெற்றது.

*" மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்*
*அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்*
*கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல் "*

என்னும் பெரியபுராணப் பாடலின்படி மனிதராய்ப் பிறந்தவர் அனைவரும், பெருமானுக்கு நடைபெறும் திருவிழாக்களைக்கண்டு தரிசித்துப் பயன் பெறுவார்களாக.

## 12. வருமானமும் சொத்துக்களும்

இக்கோயிலுக்கு ஏறக்குறைய 692 ஏக்கர் 37 சென்ட் நன்செய் நிலங்களும், 92 ஏக்கர் 9 சென்ட் புன்செய் நிலங்களும், திருச்செங்காட்டங்குடி, பெருநாட்டாந் தோப்பு, தாதன் கட்டளை, முதலிய கிராமங்களில் உள்ளன. இவைகளின் குத்தகை மூலமாயும், மனைகள், தோப்பு மூலமாயும் ஆண்டுதோறும் சுமார் நாற்பத்தையாயிரம் ரூபாயும், பிறவகைகளில் இரண்டாயிரம் ரூபாயும் வருமானம் வரும். அரசியலார் மோகினித் தொகையாக ரூ. 763—10—8 கொடுக்கிறார்கள். சுமார் (26000) இருபத்தாறாயிரம் ரூபாய் மதிப்புள்ள தங்கம், வெள்ளி திருவாபரணங்களும், வாகனங்களும் உள்ளன.

## 13. நிர்வாகம்

இக்கோயிலின் நிர்வாகம் ஆதியில் திருப்புகலூர் வேளாக்குறிச்சி ஆதீனத்தாரின் மேற்பார்வையில் இருந்தது. பிறகு நாகை ஜில்லா கோர்ட்டில் நடந்த வழக்கில் 23—4—35-ல் (Scheme) திட்டம் ஏற்பட்டு அதுமுதல் சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகாவின் (Hindu Religious and Charitable Endowments) நேர் நிர்வாகத்தில் இருந்துவருகிறது. வேளாக்குறிச்சி ஆதீனகர்த்தர் பரம்பரை டிரஸ்டியாக இருந்துவருகிறார். அற நிலையத்தாரால் நிய

மிக்கப்பெற்ற தர்மகர்த்தர்களும் (டிரஸ்டிகள்), நிர்வாக அதிகாரியும் (Treasurer) கோயில் காரியங்களைக் கவனித்து வருகிறார்கள்.

ஸ்ரீ உத்தராபதீஸ்வரரின் திருவருளாலும், தற்போதுள்ள தர்மகர்த்தர்கள் முதலியோருடைய பேருக்கத்தாலும், அறநிலையப் பாதுகாப்புத் தலைவர்களின் ஆதரவாலும் இவ்வரலாறு புதிய வெளியீடாகப் பல படங்களுடன் வெளிவருகின்றது.

## 14. கல்வெட்டுக்கள்

இக்கோயிலில் சுமார் 32 தமிழ்க் கல்வெட்டுக்கள் உள்ளன. அவைகள் சர்க்காரால் நகல் எடுக்கப்பெற்றுத் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் 1913-ல் 51 முதல் 82 வரையிலுள்ள எண்களாகப் பதிவு செய்யப்பெற்றுள்ளன. அவைகளின் விவரங்கள் வருமாறு :—

1. 51—1913. உத்தராபதீஸ்வரர் கோயில் மூல மண்டபத்தின் வடசுவரில் உள்ளது. முடிவுபெறாத கல்வெட்டு. விஜயநகரத்தரசர் வீர அரிய ராயர் மகனை வீர விருப்பண்ண உடையார் காலத்தில் சகம் 1306-ல் ரத்தாட்சியில் ஜெயமாணிக்க வளநாட்டின் பிரிவான மருகல் நாட்டிலுள்ள திருச்செங்காட்டங்குடி கணபதிஸ்வரமுடைய நாயனார் கோயிலுக்கும், உத்தராபதி நாயகர் கோயிலுக்கும் சோமய்ய தண்ணாயக்கர் என்பவரால் நிலம் வழங்கியது.

2. 52—ஷை கோயிலில் துவாரபாலகரின் இடது பக்கச் சுவரில் விஜயநகரத்து வீரபூபதி ராய உடையார் காலத்தில் சகம் 1332-ல் தொண்டைமண்டல வட்டம் ஊர்க்காட்டுக் கூற்றத்திலுள்ள பாலையூர் என்னும் மலைக்கிழான் வளம் ஊர்வாசியால் உத்தராபதி நாயகர் கோயிலுக்கு ஓர் விளக்கு வழங்கியது.

3. 53—ஷை மண்டபத்தின் தென் சுவரில் உள்ள சிதைந்த கல்வெட்டு, கோயிலின் மூர்த்திக்கு ஓர் சிங்க

ஆசனம் வழங்கியதற்காகச் சில வியாபாரிகளுக்கு நிலமும் வீடுகளும் கொடுத்தது.

4. 54—மண்டபத்தின் மேற்குச் சுவரில் உள்ள சிதைந்த கல்வெட்டு. நாட்டில் உள்ள வியாபாரிகளால் கோயிலின் ஓர் உற்சவத்திற்கு ஏற்பாடு செய்தது.

5. 55—கணபதீஸ்வரர் கோயிலின் மேற்குச் சுவரில் உள்ளது. ராஜகேசரிவர்மன் என்னும் உடையார் ராஜாதி ராஜதேவனது 32-வது ஆட்சியாண்டில் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டின் பிரிவான மருகல் நாட்டில் பிரமதேயமான திருக்கண்ணபுரம் கிராமத்தின் மகா சபையார் திருச்செங்காட்டங்குடி கணபதீச்சுரம் உடைய மகாதேவர் கோயிலுக்கு இறையிலியாக நிலம் கிரயம் செய்தது. மகாசபையார் பரமேஸ்வரமுடைய மகா தேவர் கோயிலில் கூடித் தீர்மானித்தது. சிறுத்தொண்டனுடைய மகன் சீராளனைப்பற்றிக் கூறப் பெற்றுள்ளது.

6. 56—ஷை இடத்தில் சோழமன்னன் ராஜகேசரி வர்மன் முதல் ராஜ ராஜ தேவனது 3-வது ஆண்டில் வெள்ளாளன் உலகன் சிற்றயனை தப்பில்லா மூவேந்த வேளான் என்பவனல் திருச்செங்காட்டங்குடி சீராள தேவர் கோயிலுக்கு இரண்டு நந்தாவிளக்கெரிக்க நிலம் வழங்கியது.

7. 57—ஷை இடத்தில் உள்ளது. ராஜ ராஜ கேசரிவர்மன் என்னும் முதல் ராஜராஜ தேவனது 19-வது ஆண்டில் மும்முடி சோழவள நாட்டின் பிரிவான மருகல் நாட்டில் திருச்செங்காட்டங்குடி கோயிலில் சித்திரைத் திருவாதிரை நாளில் சீராள தேவர்பெருமானை சிறுத்தொண்ட நம்பியின் மண்டபத்திற்கு ஊர்வலமாகக் கொண்டுபோகும் திருவிழாவைத் தரிசிக்க வரும் தவசிகளுக்கு உணவளிக்க நிலம் வழங்கியது. இக்கல்வெட்டின் நகல் பின்னே சேர்க்கப்பெற்றுள்ளது.

8. 58—ஷை சுவரில் உள்ளது. பரகேசரிவர்மன் என்னும் திரிபுவனச் சக்கரவர்த்தி முதலாம் ராஜேந்திர

சோழ தேவனது 3-வது ஆண்டில் தாயன் திருச்சிற்றம் பல முடையான் என்பவனால் சீராள தேவரின் புறப் பாட்டு உற்சவத்திற்காக கணபதீச்சுரம் உடையார் கோயிலுக்குப் பெருமூரிலுள்ள நிலம் வழங்கியது.

9. 59—ஷை கோயிலின் வடசுவரில் உள்ளது. ராஜ ராஜகேசரிவர்மன் என்னும் முதலாம் ராஜராஜ சோழ தேவனது 19-வது ஆண்டில் திருச்செங்காட்டங் குடிக் கோயில் சீராள தேவற்குப் பணி செய்த சிறுத் தொண்ட நம்பியின் திருவிழாவிற்காக மருகல் வாசிகள் இருவரால் நிலம் வழங்கியது. இவ்வரசனுடைய 17-வது ஆண்டில் உலகளந்தேறினபடி அளவால் நிலங்கள் அளக் கப்பெற்றன.

10. 60—ஷை இடத்தில் சோழன் பரகேசரிவர் மனது 5-வது ஆண்டில் திருச்செங்காட்டங்குடி பரமேஸ் வரர் கோயிலில் இரண்டு நந்தாவிளக்கெரிப்பதற்கு மருகல் மகாசபையாரால் ஷை கோயிலுக்கு நிலம் கிரயத் திற்கு வாங்கி வழங்கியது.

11. 61—ஷை சுவரில் சோழமன்னன் முதலாம் ராஜாதி ராஜனுடைய சரித்திர நிகழ்ச்சிகளை "திங்க ளேர்தரு" என்று தொடங்கும் கல்வெட்டுக் குறிக் கிறது.

12. 62—ஷை சுவரில், சோழன் பரகேசரி வர்மனது 11-வது ஆண்டில் மருகல் சபையார் நிலம் விற்றுக் கோயி லில் நந்தா விளக்கெரிக்க ஏற்பாடு செய்தது.

13. 63—முன் மண்டபத்தின் மேற்குப் பகுதியி லுள்ள அடித்தளத்தில் உள்ளது. திரிபுவனச் சக்கர வர்த்தி 3-ம் ராஜராஜ தேவனது 3-வது ஆண்டில் (7 May 1218) உத்தராபதி நாயகர் கோயிலுக்கும் சிறுத் தொண்டர் கோயிலுக்கும் மீருங்கூர் என்னும் ராஜ நாராயண சதுர்வேதிமங்கலத்திலுள்ள இருவரால் நிலம் வழங்கியது.

14. 64—மண்டபத்தின் வடசுவரில் திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழ தேவனது 45-வது ஆண்டில் ஜெயமாணிக்க வளநாட்டின் பிரிவான மருகல் நாட்டிலுள்ள திருச்செங்காட்டங்குடி கணபதீஸ்வரம் உடையார்க்கும், உத்தராபதி நாயகருக்கும் அர்த்தசாம காலத்தில் செங்கழுநீர் திருப்பள்ளித்தாமம் சாத்தியருள வும் திரு நந்தவனம் ஆக்கவும் இறையிலியாகத் திருச் செங்காட்டங்குடி ஊர்வாசிகளால் நிலம் வழங்கியது.

15. 65—ஷெ சுவரில் உள்ளது. மதுரையும் பாண்டியனது முடியுங்கொண்ட பரகேசரிவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவனது 11-வது ஆண்டில் விருச்சிக ஞாயிற்று அமர பட்சத்துச் சதுர்த்தசியும் வெள்ளிக்கிழமையும் பெற்ற 175-வது நாளில், ஜெய மாணிக்க வள நாட்டின் பிரிவான மருகல்நாட்டின் பிரம தேயமான திருக்கண்ணபுரத்திலுள்ள திரு விராமனதீஸ் வரம் உடையார் கோயிலுக்குச் சம்பந்தமான பத்திரச் செய்திகளைக் குறிக்க அக்கோயில் சுவர் கல்லால் கட்டப் படாததால் (இப்படிக்கல் வெட்ட இந்நாயனார் கோயிலில் திருக்கற்றளியில்லாமையால்—கல்வெட்டு) அச்செய்திகள் திருச்செங்காட்டங்குடிக் கோயிற் சுவர்களில் பொறிக்கப் பட்டன. இக்கல்வெட்டில் பெரியதேவர் — குலோத் துங்க சோழ தேவருடைய 5-வது 10-வது ஆட்சியாண்டு களில் திருக்கண்ணபுரம் கோயில் குறிக்கப்பெற்றுள்ளது.

16. 66—ஷெ. சுவரில், மதுரையும், பாண்டியனது முடியுங்கொண்ட திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத் துங்க சோழனது 18-வது ஆண்டில் 330-வது நாளில் திருச்செங்காட்டங்குடியில் உள்ள சீராளப் பிள்ளையாரை சிறுத்தொண்ட தேவர் மண்டபத்திலிருந்து திருமநக லுக்கு ஊர்வலமாகக் கொண்டுபோவதற்கு நிலம் விலைக்கு வாங்கிக்கொடுத்தது, குலோத்துங்கனைச் சுங்கம் தவிர்த்த வனைகச் சொல்லப்படுகிறது.

17. 67—சுவரில் ஷெ மன்னனது ஷெ ஆட்சியாண் டில் சீராளப் பிள்ளையாரின் வழிபாட்டுக்காகக் கோயில் நிலங்களுக்கு வரிவிலக்குச் செய்தது.

18. 68—ஷை சுவரில் மேல்கண்ட இரு கல்வெட்டுக்களும் வெளிச்சேரி அடியாள் அல்லியங்கோதையம்மை, ஆண்டார் விளங்குடையார் சிறுத்தொண்டர் ஆகிய இருவர்களின் காரணமாக ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

19. 69—ஷை மண்டபத்தின் மேற்கு அடித்தளத்தில் திரிபுவனச் சக்கரவர்த்தி ராஜராஜ சோழ தேவனது 24 வது ஆண்டில் ஏற்பட்டது. சித்திரைப் பரணி நாளில் வடக்கிலிருந்து பைரவ வேடங்கொண்டு வந்த உத்தராபதி நாயகர் தமது பக்தரான சிறுத்தொண்டருக்கு முத்தி கொடுக்கும் திருவிழாவில் திருமுத்துவானெறி (Tirumuttuvaneri) என்ற மண்டபத்தில் உத்தராபதி நாயகருக்கு ஆராதனைகள் நடத்த அரசூருடையான் திருச்சிற்றம்பலமுடையான் என்னும் திருச்சிற்றம்பல பல்லவராயன் என்பவனால் நிலம் வழங்கியது.

20. 70—அதே இடத்தில் — சோழன் பரகேசரி வர்மன் என்னும் திரிபுவனச் சக்கரவத்தி — மதுரை கொண்ட குலோத்துங்க சோழனது 10-வது ஆண்டில் 123-வது நாளில் ஏற்பட்டது. இம்மன்னன் திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரி மேக்கொண்டான் (கோன்-நேர்-இன்மை-கொண்டான்) என்று சொல்லப்படுகிறான். கோயில் மேஸ்திரியான ராஜேந்திர சோழ ஆச்சாரியனுக்குச் சில நிலங்கள் வழங்கியது. ராஜேந்திர சிங்க மூவேந்த வேளான் என்பவன் அரசனுடைய காரியங்களைக் கவனிப்பவனாக (Royal Secretary) இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

21. 71—அதே இடத்தில் உள்ள முடிவுபெறாத கல்வெட்டு. சோழன் திரிபுவனச் சக்கரவர்த்தியின் காலத்தில் அமரபட்சத்துப் பிரதமையும் உத்திரட்டாதியும் சேர்ந்த புதன்கிழமை நாளில் ஏற்பட்டது. உத்தராபதீஸ்வரருக்கு ஒவ்வொரு மாதமும் பரணி நாட்களில் ஆராதனைகள் செய்வதற்கு திருவேட்டைக் கட்டளை, தினச்சிந்தாமணிச் சதுர்வேதிமங்கலம் ஊர்களிலுள்ள நிலங்கள் கோயிலுக்கு வழங்கப்பெற்றது.

22. 72—ஷை கோயிலில் வாதாபி கணபதிகோயிலின் கிழக்கு, வடக்கு, மேற்குச் சுவர்களில் சிதைந்த

கல்வெட்டு. சோழன் திரிபுவனச் சக்ரவர்த்தி—மதுரை, கருவூர், பாண்டியன் முடிகொண்ட குலோத்துங்க சோழனது 22-வது ஆண்டில் 130-வது நாளில் ஏற்பட்டது. கோயிலின் 3-ம் பிரகாரம் கட்டுவதற்கும், அதைச்சுற்றிச் சாலை அமைப்பதற்கும் நிலங்கள் உரிமையாக்கப்பெற்ற செய்திகளும், இவ்வரசன் சுங்கம் நீக்கியதும் சொல்லப்பட்டுள்ளன.

23. 73—ஷை கோயிலின் கிழக்குச் சுவரில் உள்ளது. புதுவூர் வட்டவார் சடையான், ராஜ சூரியப் பல்லவராயன் என்போருடைய நன்கொடையால் இந்தச் சுவர் ஏற்பட்டதாக உள்ளது.

24. 74—சுவாமி கோயிலின் 2-வது கோபுர வாயில் வலதுபுறத்தில் மாளுவச் சக்கரவர்த்தியின் வேண்டுகோளின்படி உத்தராபதி நாயகர் கோயிலில் சில உற்சவங்களை நடத்துவதற்கு வரிப்பணம் வழங்கியது. இதில் கோனேரிதேவமகாராஜாவின் பெயரும் கூறப்பட்டுள்ளது.

25. 75—ஷை இடத்தில் உள்ள சிதைந்த கல்வெட்டு. விஜயநகரத்து அரசர் அரியப்ப உடையாரின் மகனை விருப்பண்ண உடையார் காலத்தில் சகம் 1306-ல் ரத்தாட்சியில் (5—2—1385) நிலம் வழங்கியது.

26. 76—ஷை இடத்தில்—இடது புறத்தில் திரிபுவனச் சக்கரவர்த்தி பராக்கிரம பாண்டிய தேவனது 7-வது ஆண்டில் உத்தராபதி நாயகர் கோயிலின் திருப்பணிக்காக மருங்கூரிலுள்ள 2 வேலி நிலங்கள் வழங்கியது. இதில் கணபதீஸ்வரமுடைய நாயனார் கோயிலில் உள்ள சீராளன் சிறுத்தொண்டன் மடம் சொல்லப்பட்டுள்ளது.

27. 77—ஷை இடத்தில் கிரந்தமும் தமிழும் கலந்த சிதைந்த கல்வெட்டு. சோழன் பரகேசரிவர்மன் பாண்டியன் முடிகளைக்கொண்ட ராஜாதி ராஜநரபதி ராஜேந்திர சோழனது (1245—67) கீர்த்திகளும் வீரச் செயல்களும் இதில் சொல்லப்பட்டுள்ளன. கோதாவரிப் பிரதேசத்தில் ராஜமகேந்திரத்துக்குப் பக்கத்திலுள்ள உத்தரலிங்காவிலிருந்த வீரராக்ஷசனைப் பிடித்து அடக்கியதும், இரு பாண்டியர்களை வென்றதும், ஹொய்சலமரபைச் சேர்ந்த

கர்நாடக மன்னன்-சோமேஸ்வரனை அடக்கியாண்டதும் கூறப்பட்டுள்ளன, இவன் காலத்தில் சித்திரை—ஐப்பசி மாதங்களில் பஜனை உற்சவம் நடத்துவதற்காக கணபதீஸ்வரம் உடையார் கோயிலில் உத்தராபதி நாயகருக்காக நிலம் வழங்கியது.

28. 78—ஷை இடத்தில் உள்ள சிதைந்த கல்வெட்டு. விஜயநகரத்தரசர் வீர விருப்பண்ண உடையார் காலத்தில் சகம் 1322-ல் (2—5—1399)ல் உத்தராபதி நாயகர் கோயிலில் சில திருவிழாக்கள் நடைபெற ஏற்பாடு செய்தது.

29. 79—ஷை இடத்தில் உள்ள சிதைந்த கல்வெட்டு. உத்தராபதி நாயகர் கோயிலின் பூஜைகளுக்காகத் தொண்டை மண்டலத்திலுள்ள நந்தீஸ்வரம் என்னும் ஊர்வாசியால் நிலம் வழங்கியது. ஜெயமாணிக்க வள நாட்டின் பிரிவான வடமருகல் நாட்டிலுள்ள பழூரில் மேல் கண்ட நிலம் வாங்கப்பெற்று வழங்கியது.

30. 80—ஷை கோயிலில் முன்னேயுள்ள சூளிகாம்பாள் கோயில் மண்டபத்தின் மேற்குச் சுவரில் உள்ளது. மதுரையும் ஈழமும் கொண்ட சோழ மன்னன் ஸ்ரீ ராஜாதி ராஜ தேவனது 13-வது ஆண்டில் (24—7—1174) திருவாலங்காடுடைய நாயனர் கோயிலுக்கு நான்கு மாதர்களை—தேவரடியார்களை 700 பொற்காசுகளுக்கு விற்கப்பட்ட குறிப்பு.

31. 81—முன் கோபுரவாயிலின் வலதுபுறத்தில் பிரஜாபதி ஆண்டில் ஏற்பட்ட சிதைந்த கல்வெட்டு. வீரநரசிங்கராய ஐயன் என்னும் காரியஸ்தனுல் கைத்தறி முதலியவைகளுக்கு வரிவிதிக்கப்பட்டது.

32. (82—1913) ஷை கோபுரவாயிலின் இடது புறத்தில் உள்ளது. சோழ மன்னன் ராஜகேசரிவர்மன் என்னும் திரிபுவனச் சக்கரவர்த்தி ராஜாதி ராஜ தேவனது மெய்க்கீர்த்திகள் "கடல் சூழ்ந்த" என்று தொடங்கும் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளன. இதில் கோயிலுக்கு நன்கொடை செய்த காடுவாங்குடையான் அரயன் ஆட்கொண்ட நாயக்கன் என்பவனைப்பற்றிச் சொல்லப்பட்டுள்ளது.

மேல்கண்ட கல்வெட்டுக்களில் ஓர் கல்வெட்டின் நகல் மாதிரிக்காகக் கீழே காட்டப்பட்டுள்ளது. (57—1913.

"திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்
தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி
வேங்கை நாடுங்கங்க பாடியும்
தடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்
முரட்டொழிற் சிங்களர் ஈழமண்டலமும்
இரட்டபாடி ஏழரை இலக்கமும்
முந்நீர்ப்பழந்தீவு பன்னீராயிரமும்
எழில்வளரூழியுளெல்லா யாண்டுந்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்

தேசுகொள் ஸ்ரீ கொவிராஜ ராஜராஜகேசரிவர்மரான் ஸ்ரீராஜராஜதேவர்க்கு யாண்டு 19-வது மும்முடி சோழ வளநாட்டு மருகல் நாட்டு வக்கையுடையான் தாயன் ஸ்ரீ கிருஷ்ணனென் இன்னாட்டுத் தெவதானம் திருச்செங் காட்டுக்குடிச்சிராள தேவர் சித்திரைத் திருவாதிரைத் திருநாளில் சிறுத்தொண்டனம்பி மாளிகையில்லுவைச்ச உடையாரடியார்க்கு ஆகாரமிடச்செய்து குடுத்த நிலமாவது, இன்னாட்டுத் திருக்கண்ணபுரத்தில் நிலன் வெண் புலத்து நானும் என்ன நுவையத்தாரு ஊரொமும் இறையிறுக்க சந்திராதித்தவல் நிற்கச்செய்து குடுத்த நிலமாவது அரையபுலத்தில்—சின்னமுமிகிதிக் குறைமை யுள்ளடங்க இறையிலியாகக் குடுத்த நிலத்துக்கெல்லை கிழ்பார்கெல்லை ஊரொம் நிலத்துக்கு மெற்கும் தென் பாக்கெல்லை குலைவரம்புக்கு வடக்கும் மெல்பார்க்கெல்லை திருக்கண்ணபுரத்து நியாய ந மடைவிளாகத்துக்கு கிழக்கும் வடபார்க்கெல்லை வாய்க்காலுக்குத்தெற்கும் இவ்விசைத்தபெரு நான்கெல்லையிலுமகப்பட்ட நில ஐச் சின்னமிகுதிக் குறையும் உள்ளடங்க உடையார் சித்திரை திருவாதிரைத் திருநாளில் சிறுத்தொண்டனம்பி மாளி கையிலே உடையார் திருவிழாச் செவிக்கவந்த தவஸி களுக்கு ஆகாரமிட நானும் என்ன நுவயத்தாரும் இ ஊரொமும் சந்திராதித்தவல் இறையிறுக்க சந்திராதித்த வல் தவஸியர்க்கு ஆகாரமிட இறையிலிசெய்து குடுத்

தென், தாயன் ஸ்ரீ கிருஷ்ணனென். இது பன்மாஹேஸ்வரர் ரக்ஷை.''

நாட்டில் பல நலங்களும், வளங்களும், நீதிகளும் பெருகவேண்டும் என்பதைப் பின்வரும் வரிகள் காட்டும்.

(65—1913).

''ஸ்வஸ்தி ஸ்ரீ-புயல்வாய்த்து வளம்பெருகப் பொய்யாத
நான்மறையின் செயல் வாய்ப்பத் திருமகளும், செய
மகளும், சிறந்துவாழி வெண்டிதி பொற்குடை
விளங்கவெல் வெந்தர்மீ வணங்கமண் மடந்தை
மனங்களிப்ப மனுநீதிதழைத்தோங்கச் சக்கரமுஞ்
செங்கொலுந் திக்கனைத்துஞ் செலநடப்பக்
கற்பகாலம் புவிகாப்பப் பொற்பமைந்த முடிபுனைந்து''

இக்கல்வெட்டுக்களால் அறியப்படும் செய்திகளாவன :- கல்வெட்டுக்கள் தூய தமிழ் மொழியில் பொறிக்கப்பட்டுள்ளன. திருச்செங்காட்டங்குடி அக்காலத்தில் மருகல் நாட்டைச் சேர்ந்திருந்தது. ஜெயமாணிக்க வளநாடு, க்ஷத்திரிய சிகாமணி வளநாடு, மும்முடி சோழவள நாடு இவற்றின் உட்பிரிவாக மருகல்நாடு இருந்தது. சோழர் காலத்தில் மண்டலம், வளநாடு, நாடு, கூற்றம் ஊர் முதலியனவாக நாடு பிரிக்கப்பட்டிருந்தது. பெருமானுக்கு கணபதீஸ்வரம் உடைய நாயனர் முதலிய பெயர்களும், தேவிக்குச் சூளிகாம்பாள் என்ற பெயரும் காணப்படுகின்றன. வடக்கிலிருந்து பைரவ வேடங்கொண்டு வந்தவருக்கு உத்தராபதியார் என்ற பெயர் உள்ளது. பிரமதேயம் என்பது பிராமணர்களுக்கு விடப்பட்ட நிலப்பகுதி. சதுர்வேதி மங்கலம் என்பது நான்கு வேதங்களிலும் வல்ல பிராமணர்கள் வசிக்குமிடம். 2450 குழி நிலங்களின் விலை 115 பொற்காசுகளாகும். பெருமானுக்குச் சிராளதேவன் என்ற பெயரும், சிறுத்தொண்டர் சிராள தேவனுக்குப் பணி செய்தவரென்றும் சொல்லப்படுகிறது. இவர் வாதாபியில் கி. பி. 642ல் போர் செய்து வெற்றி பெற்றதும், தஞ்சையில் இவருடைய உருவச்சிலை இருப்பதும் கூறப்பட்டுள்ளன. **தென்னவன் மூவேந்த வேளான்** என்பவன் சிறுத்தொண்ட நம்பி முதலியவர்களுக்குச் செப்புத்திருமேனிகள் செய்வித்ததாக ஓர் கல்வெட்டால் தெரியவருகிறது. இவனைப் பற்றிய செய்திகள் பின்னே காட்டப்பெற்றுள்ளன.

உத்தராபதி நாயகர் எழுந்தருளும் மண்டபத்திற்கு திருமுத்துவாநெறி என்ற பெயர் சொல்லப்படுகிறது. கடவுளின் பெயர்கள் மக்களுக்கு இடப்பட்டு வந்துள்ளன. வட்டவார்சடையான், திருச்சிற்றம்பலமுடையான் என்னும் பெயர்கள் வருகின்றன. ராஜராஜனுடைய பெயரால் அளவுகருவியுள்ளது. சோழமன்னர்கள், பாண்டியர்கள், விஜயநகரத்தரசர்கள் இவர்கள் காலத்தில் கோயிலுக்கு நிலங்கள் வழங்கப்பட்டன. விளக்கெரிக்கப் பல அறங்கள் செய்யப்பட்டன. ஒரு கோயிலுக்குரிய கல்வெட்டு மற்றோர் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளது. கோயில் தொண்டுகளுக்கு மாதர்கள்—தேவரடியார்கள் விலைக்கு விற்கப்பட்டார்கள். மாதப்பரணி விழாக்களும், வேறு பல உற்சவங்களும் நடைபெறவும், உற்சவகாலங்களில் உணவளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பல அரசர்களுடைய காலங்களில் அவர்களுடைய மெய்க்கீர்த்திகளும் கூறப்பட்டுள்ளன. விளக்குத் தொண்டு சிறந்ததாகப் போற்றப்பட்டுள்ளது. பாலையூர், மருங்கூர், சதுர்வேதிமங்கலம், புதுவூர், பட்டுக்கட்டரி, திருவேட்டக்கட்டளை, உத்தரலிங்கா, பழூர் முதலிய ஊர்கள் சொல்லப்படுகின்றன. கோயிலுக்கு நன்கொடைகள், அறங்கள் செய்தோருடைய பெயர்களும், அவ்வப்போது நடந்த திருப்பணிகளும் கூறப்பட்டுள்ளன. அரசர்கள் கண்ணுங் கருத்துமாய்க் கோயில்களைப் பரிபாலித்து வந்தார்கள். மகாசபையார் (Assembly) கோயிலில் கூட்டம் கூடிக் காரியங்களைக் கவனித்து வந்தார்கள். எனவே இக்கல்வெட்டுக்கள் அக்கால நிலையையும், முன்னோர்களின் நாகரிகங்களையும் செவ்வையாய் எடுத்துக் காட்டுகின்றன.

## தென்னவன் மூவேந்த வேளான்

இவன் ராஜேந்திரசிங்க மூவேந்த வேளான், தப்பில்லா மூவேந்த வேளான், வெள்ளாழன் உலகன் என்னும் பெயர்களால் வழங்கப்படுகிறான். முதலாம் ராஜராஜ சோழன் காலத்தில் பொய்கை நாடு கிழவன் எனப் பெயர்பெற்றான். ராசராசன் காலத்தில் சோழமண்டலம் ஒன்பது வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் ஒன்று இராசேந்திர சிங்கவளநாடு என்பது.

இராசேந்திரசிங்கன் என்பது ராஜராஜனது சிறப்புப் பெயர்களில் ஒன்ருகும். இந்த வளநாட்டின் பிரிவுகளில் பொய்கை நாடு என்பது ஒன்று. திருவையாறு, திருநெய்த்தானம், திருமழபாடி என்பவை இந்த நாட்டைச் சேர்ந்த பகுதிகளாகும். மூவேந்த வேளான் இந்தப் பொய்கை நாட்டுக்குத் தலைவனுய் இருந்ததால் பொய்கை நாடு கிழவன் எனப் பெயர்பெற்ருன். இவனது இயற் பெயர் ஆதித்தன் என்பதும், தென்னவன் மூவேந்த வேளான் என்பது சிறப்புப் பெயர் என்பதும் அறியத் தகும். தஞ்சை ராஜராஜேச்சரக் கோயில் எடுப்பிக்கும் போது இராசராச சோழனுல் ஸ்ரீ காரியம் பார்க்கின்ற அலுவலில் நியமிக்கப் பெற்றிருந்தான். இவனைப்பற்றிய கல்வெட்டுக்களில் ஒன்று— "ஸ்வஸ்தி ஸ்ரீ உடையார் ஸ்ரீ ராஜராஜீஸ்வர முடையார்க்கு ஸ்ரீ கார்யம் செய்கின்ற பொய்கை நாடு கிழவன், ஆதித்தன் சூரியனை தென்னவன் மூவேந்த வேளான்" என்பது. இவன் சிறந்த சிவபக்தன். சிவனடியார்களிடத்தும், அரசனிடத்தும் ஒப்பற்ற அன்புடையவன். பல அறங்களைச் செய்துள்ளான்.

இவன் பல திருப்பணிகளையும் செய்துள்ளான். திருச்செங்காட்டங்குடியில் பெருமானுக்கு இரண்டு நந்தாவிளக்கெரிக்க நிலங்கள் வழங்கியுள்ளான். மேலும் சிறுத்தொண்டர், திருவெண்காட்டு நங்கை, சீராள தேவர் முதலியோர்க்குப் படிமங்களும், பைரவ மூர்த்தி, காட்சி கொடுத்த இறைவர் ஆகியோர்க்குத் திருமேனிகளும் தஞ்சைப் பெரியகோயிலில் எழுந்தருளுவித்தான் என்று சில கல்வெட்டுக்களால் அறிகிருேம். திருமேனி என்பது கடவுளின் வடிவத்திற்கும், படிமம் என்பது மக்களின் வடிவிற்கும் சொல்லப்படும். பைரவமூர்த்திக்கு 9 விரல் அளவு உயர பீடத்தில் 18 விரல் அளவு உயரத்திலும், காட்சிகொடுத்த தேவரான க்ஷேத்திர பால தேவருக்கு 9 விரல் உயரத்தில் சம சதுர பீடத்தில் பாதாதி கேசம் முக்காலே அரைக்கால் முழ உயரத்திலும் திருமேனிகள் ஆக்குவித்து அவைகளுக்கு வேண்டிய திருவாபரணங்களையும் செய்வித்தான். சிறுத்தொண்ட நம்பிக்கு பாதாதிகேசம் வரையில் 17 விரல் அளவு உயரத்திலும், திருவெண்காட்டு நங்கைக்கு 15 விரல்

உயரத்திலும், சிராளதேவருக்கு 12 விரல் உயரத்திலும் படிமங்கள் செய்வித்து அவைகளுக்கு வேண்டிய மணி வடம், ருத்ராக்ஷக்காறை, பட்டைக்காறை, வீரபட்டம், திருக்குதம்பை, சூலம் முதலிய திருவாபரணங்களையும் செய்வித்தான்.

மூவேந்த வேளான் இந்த ஐவருக்கும் திருமேனிகளை யும், படிமங்களையும் தஞ்சையில் அமைத்ததின் நோக்கம் சிறுத்தொண்டர் திருநாளில் தஞ்சையிலும் விழா நடை பெறவேண்டும் என்று கருதியிருக்கலாம் போலும்.

(ஞானசம்பந்தத்தில் வந்த கட்டுரையைத் தழுவி இது தொகுக்கப்பெற்றது.)

## 15. புராண வரலாறுகள்.

பக்தி மார்க்கத்தில் நின்று பரமன் அருளைப்பெற்ற முன்னோர் பலருடைய பழைய வரலாறுகளாகிய புராணங் கள் பின் வழியினராகிய மற்றையோரும் அவனருளைப் பெறுவதற்குச் சாதனங்களாக — வழிகாட்டிகளாக அமைந்துள்ளன. இனிப்புப் பொருளில் மருந்தை உள் ளடக்கித் தருவதுபோலப் பல சாத்திரங்களின் உண்மை களையும், தத்துவங்களையும் உள்ளடக்கிக் கதை வடிவங் களாக ஆன்றோர்கள் புராணங்களை அமைத்தனர். அவ் வரலாறுகளைப் படிப்பதால் அவைகளில் அடங்கிய உண் மைகளைக் கைக்கொண்டு முன்னோர்கள் சென்ற மார்க்கங் களில் பிறரும் சென்று வழிபடுவதற்குப் புராணங்கள் உதவக்கூடும்.

இத்தலத்தின் பெருமைகளை விரித்துக்கூறும் ஓர் புராணம் உண்டு. பாயிரம் முதல் அபிடேகச் சருக்கம் வரையில் 22 சருக்கங்களில் 1054 பாடல்களைக் கொண் டது. ஆசிரியர் தெரியவில்லை. இதில் பலவரலாறுகள் கூறப்பட்டுள்ளன. தேவர்கள், முனிவர்கள் முதலியோர் களுக்குச் சிவபெருமான் மந்திரம் அருளியது, சத்தியா ஷாட முனிவர் தவம் செய்தது, ரத்தநாமுகி, ரத்தபீஜன் என்னும் அசுரர்களை அழித்தது, பிரமன், சூரியன், வருணன், இந்திரன். முதலியோர் வழிபட்டது, விநாயகர் கஜமுகாசுரனைக் கொன்றது, வசுதேவர் வழிபட்டது. உத்தராபதியாரின் திருவுரு அமைந்தது, செயற்கரிய செயலைச்செய்த சிறுத்தொண்டருக்குப் பெருமான் அருள்

செய்தது, முதலிய வரலாறுகள் கூறப்பட்டுள்ளன. சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணத்திலும் இத்தலத்தைப் பற்றியும், சிறுத்தொண்டரைப் பற்றியும், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இவ்விடம் வந்து பதிகம் பாடியதைப் பற்றியும் வரலாறுகள் சொல்லப் பட்டுள்ளன. அவைகளைத் தழுவிச் சில வரலாறுகள் சுருக்கமாகக் கூறப்படும்.

## (1) கஜமுகாசுரன் வரலாறு.

மாகதன் என்னும் முனிவனுக்கு விபுதை என்னும் அசுரப் பெண்ணினிடம் யானை முகத்துடன் கூடிய ஓர் புத்திரன் பிறந்தான். அவன் கஜமுகாசுரன் என்னும் பெயர் கொண்டு பரமசிவனை நோக்கித் தவஞ்செய்து, தேவர்கள் தன் ஏவல் கேட்கவும், தான் தேவர் முதலானவர்களாலும், எவ்வித ஆயுதங்களாலும் இறவாமலிருக்கவும் வரம்பெற்று விசித்திரகாந்தி என்பவளை மணந்து மதங்கபுரம் என்னும் நகரத்தில் இருந்து அரசு புரிந்து வந்தான். அவனால் உண்டாகும் துன்பத்திற்கு ஆற்றாதவர்களாய்த் தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டார்கள். அப்போது விநாயகர் சிவகுமாரராக யானைமுகத்துடன் திரு அவதாரஞ்செய்து கஜமுகாசுரன் பெற்றவரத்தின் இயல்புகளை அறிந்து பூதகணங்களுடன் புறப்பட்டுச் சென்று தமது வலப்பக்கத்திலிருந்த ஒரு கொம்பை ஒடித்து அவன்மேல் எறிந்து வதைத்தார். இதனால் அவருக்கு ஒற்றைக் கொம்பர் என்று பெயர் ஏற்பட்டது. அந்தக் கொம்பும் அவனை வதைத்த பின் விநாயகர் திருக்கரத்தில் வந்து சேர்ந்தது. கஜமுகாசுரன் வரம்பெற்றவனாதலால் முன்னுருவம் மாறிப் பெருச்சாளி வடிவங்கொண்டு போரிட வந்தான். அப்போது விநாயகர் அதைத் தனது வாகனமாக்கிக் கொண்டார். இதனால் அவருக்கு மூஷிகவாகனர் என்று பெயர் உண்டாயது. கஜமுகாசுரனைக் கொன்றபோது அவனுடைய இரத்த வெள்ளம் பெருகிச் செங்காடாய் விளங்கியதால் செங்காட்டங்குடி என்றும்,விநாயகர் கஜமுகாசுரனைக்கொன்ற பழி நீங்கும்பொருட்டு இத்தலத்தில் பெருமானைப் பிரதிட்டைசெய்து வழிபட்டதால், கோயிலுக்கு கணபதீச்சரம், என்றும் பெயர்கள் ஏற்பட்டன. விநாயகர்,

பெருமானை வழிபட்ட விழா, ஆண்டுதோறும் மார்கழி மாதத்தில் பூட்வபட்சம் சதயமும், சஷ்டியும் கூடிய நாளில் நடைபெறுகிறது.

## (2) சிறுத்தொண்டர் வரலாறு

சோழ நாட்டில் காவேரித் திருநாட்டு வளங்காட்டும் திருச்செங்காட்டங்குடியில் மாமாத்திரர் குலத்தில் பரஞ்சோதியார் என்பவர், போருக்குரிய குதிரையேற்றம், யானையேற்றம் முதலிய படைத்தொழில்களில் சிறந்து விளங்கினர். மேலும் சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்றும், அவருடைய திருவடிகளை அடைதலே முத்தி என்றும் தெளிந்து சிவபெருமானிடத்திலும், சிவனடியார்களிடத்திலும் அன்புகொண்டு வாழ்ந்துவந்தார். ஒருமுறை வடதேசத்தில் வாதாபி நகரத்தில் கி. பி. 642ல் நடந்த போரில் தமது அரசனுக்காகத் தாமேசென்று பகைவர்களை வென்று அங்கிருந்து பல பொருள்களைக் கொண்டு வந்து அரசனுக்குக் கொடுத்தார். கொண்டுவந்த பொருள்களில் வாதாபி கணபதியின் சிலை ஒன்று. கோயிலில் இதற்குத் தனிச் சந்நிதி உள்ளது. அரசன் இவருடைய பெருமையை அறியாது போர்முனைக்கு அனுப்பியதை உணர்ந்து வருந்திப் பரஞ்சோதியாரிடம் அவரது விருப்பத்தின்படியே சிவத்தொண்டில் ஈடுபடும்படி விடை கொடுத்தனுப்பிவிட்டான். பரஞ்சோதியார் நற்குடியிற் பிறந்த திருவெண்காட்டு நங்கை என்னும் அம்மையாரை மணந்து, கருத்து ஒருமித்து இல்லறம் நடத்திக்கொண்டு கணபதீச்சரத்திலுள்ள பெருமானை வணங்கித் தொண்டு செய்து வந்தார். சிவனடியார்களைத் தினந்தோறும் அழைத்துவந்து அவர்களுக்கு அறுவகைச் சுவையுடன் உணவளித்துவந்தார். அடியார்களின் முன்னே தம்மை மிகவும் சிறியவராய் எண்ணி ஒழுகிவந்ததால் சிறுத்தொண்டர் எனப் பெயர்பெற்றார்.

"மேதகையார் அவர் முன்பு மிகச் சிறியராய் அடைந்தார்
ஆதலினாற் சிறுத்தொண்டர் என நிகழ்ந்தார்"

**(பெரிய புராணம்)**

அப்போது இவருக்குச் சீராளன் திருவருளால் ஓர் ஆண்குழந்தை பிறந்து அதற்குச் சீராளதேவன் என்று பெயரிட்டு, அவ்வப்போது செய்யவேண்டிய சடங்குகளைச்

செய்துவந்தார். உரிய பருவத்தில் சீராள தேவன் பக்கத்திலுள்ள திருமருகலுக்குச் சென்று கல்வி பயின்று வந்தான். அவன் கல்விபயின்ற இடம் தற்போது 'சீராள தேவன் கல்விபயின்ற இடம்' என வழங்குகிறது.

அக்காலத்தில் திருஞான சம்பந்தர் பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு இத்தலத்துக்கு எழுந்தருளுவதைச் சிறுத்தொண்டர் கேள்வியுற்று ஓடிச்சென்று அவரை எதிர்கொண்டு தம் மனைக்கு அழைத்துவந்து உபசரித்தார். திருஞானசம்பந்தர் அவருடைய உயர் குணங்களைத் தமது பதிகத்தில் "செங்காட்டங்குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய", "சீராளன் சிறுத்தொண்டன்" என்பனவாகப் பாராட்டிச் சிறப்பித்துச் சென்றார்.

சிறுத்தொண்டருடைய பெருமையை உலகுக்கு அறிவிக்கவும், அவருடைய மெய்யன்பைத் தாம் நுகரவும், சிவபெருமான் பைரவ வேடங்கொண்டு உத்தராபதியார் என்னும் பெயருடன் வடக்கிலிருந்து புறப்பட்டு வந்தார். வலக்கரத்தில் தமருகமும், இடக்கையில் கபாலமும், தோளில் மூவிலைச் சூலமும் தாங்கி முகத்தில் அருளும், புன்னகையுங் கொண்டு இடுப்பு வளைந்து இரு பாதங்களையும் பூமியில் ஊன்றிச் சமபாத நடனத்துடன் வந்தார். சேக்கிழார் இவருடைய கோலத்தைப் பின்வருமாறு காட்டுகிறார்.

அயன்கபாலந் தரித்த இடத்திருக்கையால் அணைத்த
வயங்கொளி மூவிலைச் சூலம் மணித்திருத்தோள்
மிசைப்பொலியத்
தயங்கு சுடர் வலத்திருக்கைத் தமருகத்தின் ஒலிதழைப்பப்
பயன் தவத்தால் பெறும்புவியும் பாத தாமரை சூட

அருள்பொழியுந் திருமுகத்தில் அணிமுறுவல் நிலவெறிப்ப
மருள்பொழி மும்மலஞ் சிதைக்கும் வடிச்சூலம்
வெயிலெறிப்பப்

பொருள்பொழியும் பெருகன்புதழைத்
தோங்கிப்புவிஉய்த்தத்
தெருள்பொழிவண் தமிழ்நாட்டுச் செங்காட்டங்குடிச்
சேர்ந்தார்.

**(பெரிய புராணம்)**

செஞ்சடையும் புறத்தாடச் சிவந்தகலை கஞ்சுகமுஞ்
சூலமாட
செஞ்சிலம்பு பத்தாடத் தெருவெலாம் பொடியாடத்
தேவராட
நஞ்சருந்தி இரந்துண்டு மாமுழுங்கி பசியொழியா
நலிவினாலே
நெஞ்சிரங்கா னுயிர் பருகும் ஞானியாகி நெடுவீதி
நடந்துவந்தார்.

**(தலபுராணம்)**

இவ்வாறு புறப்பட்டுவந்த பெருமான் சிறுத்தொண்டருடைய மனைக்குச் சென்றபோது அவர் இல்லாததால் கோயிலில் உள்ள ஆத்திமரத்தினடியில் தங்கியிருந்தார். சிறுத்தொண்டர் கேள்விப்பட்டு ஆத்திமரத்தினடியில் அமர்ந்திருந்த அடியவரான உத்தராபதியாரை அமுதுண்ண அழைத்தார். அடியவர் சிறுத்தொண்டரிடம் "நாம் உண்பது நரப்பசு. ஒரு குடிக்கு ஒரே மகனாய், அங்கப் பழுதில்லாதவனாய் உள்ள ஒருவனைத் தாய் தந்தையர் உடனிருந்து அரிந்து கறிசமைத்து இடவேண்டும்" என்றார், சிறுத்தொண்டரும் மனையின் இசைவு பெற்றுப் பள்ளிக்குச் சென்று சீராளதேவனை அழைத்து வந்து திருமஞ்சனமாட்டிப் பெற்றோர் மகிழ்ந்திருக்க அதைக்கண்டு புதல்வனும் மகிழ்ந்து நகைசெய்தான்.

"நனிநீடுவகை உறுகின்றார் என்று காதலனும் மகிழ்ந்து நகை செய்ய" என்று சேக்கிழார் கூறுகிறார். அப்போது சிறுத்தொண்டர் தாம் கருதியபடியே செயற்கருஞ்செயலைச் செய்தார், மனைவியும், தாதியான சந்தனநங்கையும் சேர்ந்து பலவகை உணவுகளைச் சமைத்தார்கள். சிறுத்தொண்டர் மீண்டும் சென்று ஆத்திமரத்தடியிலுள்ள அடியவரை அழைத்துவந்து திருவடி விளக்கி ஓர் ஆசனத்தில் அமர்த்தி உணவு படைத்தார். அடியவர் சிறுத்தொண்டரிடம் "உடனிருந்து உண்ண ஓர் சிவனடியாரை அழையும்" என்றார். சிவனடியார் ஒருவரும் அகப்படாமையால் வருந்தியபோது அடியவர் "உமது மகனை அழையும்" என்றார். "அவன் இப்போது உதவான்" என்று கூற, அடியவரின் கட்டளைப்படி சிறுத்தொண்டர் தம் மனைவியுடன் வெளியே சென்று



வலமிருந்து :— சிறுத்தொண்டர், திருவெண்காட்டுநங்கை,
சீராளதேவர், சந்தனநங்கை.



**சிறுத்தொண்டர் முதலியோர் கைலை செல்லும் காட்சி**

"மைந்தா வருவாய்" என்றழைத்தார். மனைவியாரும் "செய்யமணியே சீராளா, சிவனுர் அடியார் யாம் உய்யும் வகையால் உடனுண்ண அழைக்கின்ருர். வாராய்" என்று அழைத்தார். அப்போது பரமன் அருளால் பள்ளியினின்று ஓடி வருவான்போலச் சீராளன் ஓடிவந்தான். பெற்ருேர் மனம் மகிழ்ந்து அவனை அழைத்துக் கொண்டு உள்ளே வந்தார்கள். இதற்குமுன்பே பைரவராய் வந்த பெருமான் மறைந்தருளக் கலத்தில் படைத்த கறியமுதும் காணப்படவில்லை. சிவபெருமான் உமாதேவியாரோடும், முருகப்பெருமானேடும் ரிஷப வாகனத்தில் ஆகாயத்தில் காட்சி கொடுத்தார். சிறுத்தொண்டரும், மனைவியாரும், புதல்வரும், தாதியரும் கண்டு தரிசித்து வணங்கினுர்கள். பெருமான் அவர்கள் நால்வரையும் தம்மைப்பிரியாது இறைஞ்சி இன்புற்றிருக்கும் வண்ணம் அவர்களை உடனழைத்துச் சென்ருர். சிறுத்தொண்டர் முதலிய நால்வரும் சிவபெருமானுடன் திருக்கைலை செல்வதைக் காட்டும் சிற்பம் கோயிலில் வடபுறச் சுவரில் உள்ளது. 63 நாயன்மார்களில் சிறுத்தொண்டர் ஒருவராக விளங்குகிருர். ஆண்டுதோறும் சித்திரைப் பரணியில் அமுதுபடையல் திருவிழா நடைபெறுகிறது. (இது பெரியபுராணத்தைத்தழுவி எழுதப் பெற்றது).

கொன்றை வேணியார்தாமும் பாகங்கொண்ட குலக்
கொடியும்
வென்றி நெடுவேல் மைந்தருந்தம் விரைப் பூங்கமலச்
சேவடிக்கீழ்
நின்ற தொண்டர் மனைவியார் நீடுமகனுர் தாதியார்
என்றும் பிரியாதே இறைஞ்சி இருக்க உடன்
கொண்டேகினுர்.

**(பெரிய புராணம்)**

செய்ய பரஞ்சோதி சிறுத்தொண்ட ராமறை யோர்
பைரவற்குத் தன்னேர் மகவரிந்து—குய்கமழ
வாட்டமின்றி அட்டளிப்ப மன்னருளாற் சேய்வரச்செங்
காட்டங் குடியிலுய்ந்தார் காண்.

**(பெரியபுராண சார வெண்பா)**

பல்கும்ருத் துவர்அதிபர் செங்காட்டங்குடிவாழ்
படைத்தலைவர் அமுதளிக்கும் பரஞ்சோதியார்மெய்ச்
செல்வமிகு சிறுத்தொண்டர் காழிநாடன்
திருவருள் சேர்ந்தவர் வளருஞ் சீராளன் தன்னை
நல்குதிரு வெண்காட்டு நங்கை சமைத்திடப்பின்
நன்மதிச் சந்தனத்தாதி தலைக்கறியிட்டு தவப்
புல்கவரும் வயிரவர்தாம் மகிழ்ந்து மிக அருளப்
போற்றியவர் சிவன்ருளே பொருந்தினரே.

(புராண சாரம்)

**இவ்வரலாற்றின் தத்துவம் :—** உலகப் பற்றைவிட்டு இறைவன் திருவடிகளைப் பற்றினவர்க்கே திருவருள் கைகூடும் என்பர். உலகப்பற்றுக்களில் சிறந்தபற்று பிள்ளையிடம் காட்டுவதாகும். அப்பற்றையும் விட்டவர் சிறுத்தொண்டர் என்பதும், பற்றைவிட்ட இடத்தில் ஆண்டவர் அருளினார் என்பதும் அறிந்து போற்றத் தக்கவை. "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்றபடி எல்லோர்க்கும் முத்திகிடைத்தது.

### 3. சத்தியாஷாட முனிவர் வழிபட்டது.

சிவபக்தியிற் சிறந்த சத்தியாஷாட முனிவர் இத்தலத்தில் சிவபிரானைக்குறித்துப் பலகாலம் தவம் செய்தார். அப்போது ரத்தநாமுகி-ரத்தபீஜன் என்னும் அசுரர்கள் முனிவருடைய தவத்தை அழிக்க முயன்றனர். இதை உணர்ந்த சிவபெருமான் சூலம், கதை, கபாலம், முதலிய படைகளுடன் புறப்பட்டுச்சென்று அசுரர்களைக் கொன்று உதிரத்தைக் கபாலத்தில் கொண்டார். அதில் ஓர் திவலை பூமியில் விழுந்து பரவிச் செங்காடாக்கியது. பல ஆண்டுகள் மழைபொழிந்தும் நிறம் மாறவில்லை. இதனால் இத்தலத்துக்குச் செங்காடு என்று பெயர் ஏற்பட்டது. இத்தலத்துக்குரிய மந்திரபுரி முதலிய எட்டுப் பெயர்களில் இதுவும் ஒன்று. சத்தியாஷாடரின் தவத்திற் கிரங்கிப் பெருமான் காட்சி கொடுத்து 'என்ன வரம் வேண்டும்' எனக்கேட்டார். முனிவர் 'இத்தலமும், மூர்த்தியும், தீர்த்தமும் தன்பெயரால் விளங்கவேண்டும்' எனவேண்டினார். அதனால் இத்தலம் சத்தியபுரி என்றும், தீர்த்தம் சத்தியபுட்கரணி என்றும், பெருமானுக்குச் சத்தியபுரீசர் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. சத்தியா

ஷாடர் பெருமானைப் பூஜிப்பதைக்காட்டும் சிற்பம் ஓர் தூணில் உள்ளது.

### 4. வசுதேவன் வழிபட்டது.

பாண்டி நாட்டில் பொதியமலைச் சாரலில் நீர்வளம் மிகுந்த தாமிரபரணி நதிக்கரையிலுள்ள ஓர் ஊரில் வசுதேவன் என்ற அந்தணன் வேதம், வேதாங்கம், புராணம், ஆகமம் முதலிய நூல்களில் வல்லவனாய் நல்லொழுக்கமுடையவனாய் மனைவியுடன் வாழ்ந்துவந்தான். இம்மைக்குரிய பல செல்வங்களைப் பெற்றிருந்தும் புத்திரப் பேறில்லாதவனாய்க் கவலைகொண்டு பொதிகை மலையிலிருக்கும் அகத்தியமுனிவரைக்குறித்துத் தவஞ்செய்தான். முனிவர் வெளிப்பட்டு அந்தணனிடம் "சோழநாட்டில் காவிரிக்குத் தென்கரையில் தேவர்களும் முனிவர்களும் வணங்கி வழிபடும்படியான திருச்செங்காட்டங் குடித் தலத்தை அடைந்து ஆங்குள்ள தீர்த்தங்களில் மூழ்கிச் சிவபெருமானையும், தேவியையும் வணங்கியும், சிவனடியார்களுக்கு அறுசுவைகளுடன் அமுதூட்டி உபசரித்தும் வந்தால் புத்திரப்பேறு அடையலாம்" என்று உபதேசித்தார். வசுதேவன், முனிவர் அருளியபடியே பாண்டி நாட்டுத் தலங்களை வணங்கிச் சோழநாடடைந்து திருவையாறு, திருவாரூர் முதலிய தலங்களையும் தரிசித்துக் கொண்டு முடிவில் திருச்செங்காட்டங்குடி சேர்ந்து பல நாட்கள் தங்கியிருந்து தீர்த்தங்களில் படிந்து கணபதீச்சரப் பெருமானையும், தேவியையும் வழிபட்டு வந்ததுடன் சிவனடியார்களுக்கு அமுதளித்து உபசரித்தும் வந்தான். சிவபெருமான் அருளால் அவனுக்குப் புத்திரப் பேறு கிடைத்துத் தன்னூடு சென்று வாழ்ந்து முத்தியடைந்தான்.

### 5. உத்தராபதியார் திருவுருவம் அமைந்தது.

தொண்டைநாட்டில் காஞ்சிபுரத்தில் பல்லவர் குலத்தில் ஐயடிகள் காடவன் என்னும் அரசன் அரசு புரிந்துவந்தான். அக்காலத்தில் திருச்செங்காட்டங் குடியில் சிறுத்தொண்டர் செயற்கருஞ் செயல்செய்து சிவபிரானோடும் கைலாயஞ்சென்ற அற்புதச்செயலைக் கேள்வியுற்றுத் தானும் அத்தலத்தைத் தரிசிக்க விரும்பி நால்வகைச் சேனைகளுடன் புறப்பட்டான். சிதம்பரம் முதலிய தலங்களைத் தரிசித்துச் செங்காட்டங்குடியை

அடைந்து, கணபதீச்சரரின் சந்நிதியில் வீழ்ந்து வணங்கினன். எழுந்துநின்று மெய்சிலிர்க்க நாகுளற அனலிற்பட்ட மெழுகுபோல் மனம்நைந்து "பெருமானே! பரஞ்சோதியாருக்குத் திருவுளமிரங்கித் தோன்றிய சொரூபலட்சணத்தை அடியேனும் தரிசிக்க அருள்புரியவேண்டும்" என்று வேண்டினன்.

"சிந்தைநிலைகுலையாத சிறுத்தொண்டர் மாமனையாள்
சந்தனத்தர் சீராளர் தங்களுக்கு வீடளிக்க
வந்ததிரு உருக்காட்டி அடியேற்கும் வல்வினையின்
பந்த மறுத்துன்பாதபங்கயஞ் சேரெனப்பணிந்தான்"

**(தலபுராணம்)**

பெருமான் அசரீரியாக "அரசனே இன்னும் 21 தினத்தில் கோயில் திருப்பணிசெய்து, உத்தராபதீஸ்வரரின் திருவுருவம் அமைத்துத் திருவோணநாளில் கும்பாபிஷேகம் முடித்துத் திருவுலா நடத்திஞல் அப்போது உத்தரவீதியில் செண்பகப்பூ மணத்துடன் தரிசனம் தருவோம்" என்று அறிவித்தார். அரசன் கருமான்களை அழைத்து உத்தராபதியின் உருவச்சிலை அமைக்க முயன்றும் உருவம் அமையவில்லை. அரசனும் பிறரும் இதனல் கவலையுற்றபோது சிவபெருமான் ஓர் சிவயோகியின் உருக்கொண்டு உலைக்களத்தில் வந்து பருகுதற்கு நீர் கேட்டார். கருமான்கள் இவ்விடத்தில் கரு கொதிக்கிறதென்று கூற அதுவே வேண்டுமென்றார். கருமான்கள் கொதிக்கும் கருவைப் பெருமானிடம் கொடுக்கப் பெருமான் அதை வாங்கி உண்டார். அதுவே அழகிய உருவாய் அமைந்தது. யோகியரும் மறைந்தார். யாவரும் அதிசயித்தனர். பிறகு அவ்வுருவில் சீவுளிபோடும்போது இரத்தம் பீறிட்டது. அப்போது பெருமான் அருளால் குங்குமப்பூ, பச்சை கற்பூரஞ் சாத்த இரத்தம் நின்றது. அத்திருவுருவே உத்தராபதியாரின் திருவுருவாகக் கோயில் கொண்டு உள்ளது. இக்கோயிலுக்குரிய நவதாண்டவ மூர்த்திகளில் இதுவே சிறந்தது. காடவ மன்னன் கோயில் திருப்பணி செய்து, திருவோண நாளில் கும்பாபிஷேகம் நடத்திஞன். பெருமான் திருவுலாவரும்போது வடக்கு வீதியில் செண்பகப்பூ மணத்துடன் அரசனுக்குக் காட்சி கொடுத்தார். காடவ மன்னனும் தரிசித்து முத்தியடைந்தான். அரசனுக்குக் காட்சி தரும் விழா, ஆண்டுதோறும் சித்திரை மாதம் திருவோண நாளில் நடைபெறுகிறது.

# 16. இலக்கியப் பாடல்கள்.

## திருஞானசம்பந்தர் பாடிய தேவாரம்

### பண்—பழந்தக்கராகம்

1. நறைகொண்ட மலர்தூவி விரையளிப்ப நாடோறும்
முறைகொண்டு நின்றடியார் முட்டாமே பணிசெய்யச்
சிறைகொண்ட வண்டறையுஞ் செங்காட்டங் குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான் கணபதீச் சரத்தானே.

2. வாரேற்ற பறையொலியுஞ் சங்கொலியும் வந்தியம்ப
ஊரேற்ற செல்வத்தோ டோங்கியசீர் விழவோவாச்
சீரேற்றம் உடைத்தாய செங்காட்டங் குடியதனுள்
காரேற்ற கொன்றையான் கணபதீச் சரத்தானே.

3. வரந்தையான் சோபுரத்தான் மந்திரத்தான் தந்திரத்தான்
கிரந்தையான் கோவணத்தான் கிண்கிணியான் கையதோர்
சிரந்தையான் செங்காட்டங் குடியான்செஞ் சடைசேரும்
கரந்தையான் வெண்ணீற்றான் கணபதீச் சரத்தானே.

4. தொங்கலுங் கமழ்சாந்தும் அகிற்புகையுந் தொண்டர்கொண்
டங்கையால் தொழுதேத்த அருச்சுனற்கன் றருள்செய்தான்
செங்கயல்பாய் வயலுடுத்த செங்காட்டங் குடியதனுள்
கங்கைசேர் வார்சடையான் கணபதீச் சரத்தானே.

5. பாலினால் நறுநெய்யாற் பழத்தினாற் பயின்றாட்டி
நூலினால் மணமாலை கொணர்ந்தடியார் புரிந்தேத்தச்
சேலினார் வயல்புடைசூழ் செங்காட்டாங் குடியதனுள்
காலினாற் கூற்றுதைத்தான் கணபதீச் சரத்தானே.

6. நுண்ணியான் மிகப்பெரியான் ஓயுளார் வாயுளான்
தண்ணியான் வெய்யான் தலைமேலான் மனத்துளான்
திண்ணியான் செங்காட்டங் குடியான்செஞ் சடைமதியக்
கண்ணியான் கண்ணுதலான் கணபதீச் சரத்தானே.

7. மையினார் மலர்நெடுங்கண் மலைமகளோர் பாகமாம்
மெய்யினான் பையரவம் அரைக்கசைத்தான் மீன்பிறழச்
செய்யினார் தண்கழனிச் செங்காட்டங் குடியதனுள்
கையினார் கூரெரியான் கணபதீச் சரத்தானே.

8. தோடுடையான் குழையுடையான் அரக்கன்தன் தோளடர்த்த
பீடுடையான் போர்விடையான் பெண்பாகம் மிகப்பெரியான்
சேடுடையான் செங்காட்டங் குடியுடையான் சேர்ந்தாடும்
காடுடையான் நாடுடையான் கணபதீச் சரத்தானே.

9. ஆன்ஊரா உழிதருவான் அன்றிருவர் தேர்ந்துணரா
வான்ஊரான் வையகத்தான் வாழ்த்துவார் மனத்துளான்
தேனூரான் செங்காட்டங் குடியான் சிற்றம்பலத்தான்
கானூரான் கழுமலத்தான் கணபதீச் சரத்தானே.

10. செடிநுகருஞ் சமணர்களும் சீவரத்த சாக்கியரும்
படிநுகரா தயருழப்பார்க் கருளாத பண்பினன்
பொடிநுகருஞ் சிறுத்தொண்டர்க் கருள்செய்யும் பொருட்டாகக்
கடிநகராய் வீற்றிருந்தான் கணபதீச் சரத்தானே.

11. கறையிலங்கு மலர்க்குவளை கண்காட்டக் கடிபொழிலின்
நறையிலங்கு வயற்காழித் தமிழ்ஞான சம்பந்தன்
சிறையிலங்கு புனற்படப்பைச் செங்காட்டங் குடிசேர்த்தும்
மறையிலங்கு தமிழ்வல்லார் வானுலகத் திருப்பாரே.

**திருஞானசம்பந்தர், பண்—பஞ்சமம்**

12. பைங்கோட்டு மலர்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
செங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வேங்காட்டுள் அனலேந்தி விளையாடும் பெருமானே.

13. பொன்னம்பூங் கழிக்கானற் புணர்துணையோ டுடன்வாழும்
அன்னங்காள் அன்றில்காள் அகன்றும்போய் வருவீர்காள்
கன்னவில்தோள் சிறுத்தொண்டன் கணபதீச் சரம்மேய
இன்னமுதன் இணையடிக்கீழ் எனதல்லல் உரையீரே.

14. குட்டத்துங் குழிக்கரையுங் குளிர்பொய்கைத் தடத்தகத்தும்
இட்டத்தால் இரைதேரும் இருஞ்சிறகின் மடநாராய்
சிட்டன்சீர்ச் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
வட்டவார் சடையார்க்கென் வருத்தஞ்சென் றுரையாயே.

15. கானருகும் வயலருகுங் கழியருகுங் கடலருகும்
மீனிரிய வருபுனலில் இரைதேர்வெண் மடநாராய்
தேனமர்தார்ச் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
வானமருஞ் சடையார்க்கென் வருத்தஞ்சென் றுரையாயே.

16. ஆரலாஞ் சுறவமேய்ந் தகன்கழனிச் சிறகுலர்த்தும்
பாரல்வாய்ச் சிறுகுருகே பயில்தூவி மடநாராய்
சீருலாஞ் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
நீருலாஞ் சடையார்க்கென் நிலைமைசென் றுரையீரே.

17. குறைக்கொண்டார் இடர்தீர்த்தல் கடனென்றே
குளிர்பொய்கைத்
துறைக்கெண்டை கவர்குருகே துணைபிரியா மடநாராய்
கறைக்கண்டன் பிறைச்சென்னிக் கணபதீச்சரம் மேய
சிறுத்தொண்டன் பெருமான்சீர் அருளொரு
நாட்பெறலாமே.

18. கருவடிய பசுங்கால்வெண் குருகேயொண் கழிநாராய்
ஒருஅடியாள் இரந்தாளென் றொரு நாட்சென் றுரையீரே
செருவடிதோட் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
திருவடிதன் திருவருளே பெறலாமோ திறத்தவர்க்கே.

19. கூராரல் இரைதேர்ந்து குளமுலவி வயல்வாழும்
தாராவே மடநாராய் தமியேற்கொன் றுரையீரே
சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
பேராளன் பெருமான்றன் அருளொருநாட் பெறலாமே.

20, நறப்பொலிபூங் கழிக்கானல் நவில்குருகே உலகெல்லாம்
அறப்பலிதேர்ந் துழல்வார்க்கென் அலர்கோடல் அழகியதே
சிறப்புலவன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
பிறப்பிலிபேர் பிதற்றிநின் றிழக்கோவெம் பெருநலமே.

21. செந்தண்பூம் புனல்பரந்த செங்காட்டங் குடிமேய
வெந்தநீ றணிமார்பன் சிறுத்தொண்ட னவன்வேண்ட
அந்தண்பூங் கலிக்காழி அடிகளையே அடிபரவும்
சந்தங்கொள் சம்பந்தன் தமிழுரைப்போர் தக்கோரே.

திருஞானசம்பந்தர் இப்பதிகத்தில் சிறுத்தொண்டநாயனருடைய உயர்குணங்களை, "செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய—சீராளன் சிறுத்தொண்டன்" முதலியனவாகப் பாராட்டிப் பாடியுள்ளார். மேலும் தம்மைப் பெண்ணாகப் பாவித்து, பறவைகள், அன்னம், அன்றில், மடநாரை, சிறுகுருகு முதலிய பறவை இனங்களை அழைத்து அவைகளிடம் தம் துன்பத்தைச் சிவபெருமானிடம் கூறும்படி வேண்டுகிறார். "செங்காட்டங் குடிமேய வட்டவார் சடையார்க்கென் வருத்தஞ்சென் றுரையாயே, என நல்லல் உரையீரே, என் நிலைமைசென் றுரையீரே, பெருமான்சீர் அருள்ஒரு நாள் பெறலாமோ, பிறப்பிலிபேர் பிதற்றிநின்று இழக்கோஎம் பெருநலமே" என்பனவாகச் சொல்லி முறையிடுகின்றார்.

### திருஞானசம்பந்தர், பண்—நட்டபாடை.

(திருமருகலும் திருச்செங்காட்டங் குடியும்)

22. அங்கமும் வேதமும் ஓதுநாவர் அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல்மதி தவழ்மாடவீதி மருகல்நிலாவிய
மைந்தசொல்லாய்
செங்கயலார்புனற் செல்வம்மல்குசீர்கொள்
செங்காட்டங்குடியதனுள்
கங்குல்விளங்கெரி யேந்தியாடுங் கணபதி
யீச்சரங்காமுறவே.

23. நாலுங் குலைக்கமுகோங்கு காழிஞானசம்பந்தன்
நலந்திகழும்
மாலின்மதி தவழ்மாடமோங்கும் மருகலின்மற்றதன்
மேல்மொழிந்த
சேலுங்கயலுந் திளைத்தகண்ணார் சீர்கொள்செங்
காட்டங்குடியதனுள்
சூலம்வல்லான் கழலேத்துபாடல் சொல்லவல்லார்
வினையில்லையாமே.

### திருநாவுக்கரசர் பாடிய திருத்தாண்டகம்

24. பெருந்தகையைப் பெறற்கரிய மாணிக்கத்தைப்
பேணிநினைந் தெழுவார்தம் மனத்தேமன்னி
இருந்தமணி விளக்கதனை நின்றபூமேல்
எழுந்தருளி யிருந்தானை எண்தோள்வீசி
அருந்திறல்மா நடமாடும் அம்மான் தன்னை
அங்கனகச் சுடர்க்குன்றை அன்றாலின்கீழ்த்
திருந்துமறைப் பொருள் நால்வர்க்கருள் செய்தானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே.

25. துங்கநகத் தாலன்றித் தொலையா வென்றித்
தொகுதிறலவ் விரணியனை ஆகங்கீண்ட
அங்கனகத் திருமாலும் அயனுந் தேடும்
ஆரழலை அனங்கனுடல் பொடியாய் வீழ்ந்து
மங்கநகத் தான்வல்ல மருந்து தன்னை
வண்கயிலை மாமலைமேல் மன்னி நின்ற
செங்கனகத் திரள்தோளெஞ் செல்வன் தன்னைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே.

26. உருகுமனத் தடியவர்கட் கூறுந் தேனை
உம்பர்மணி முடிக்கணியை உண்மை நின்ற
பெருகுநிலைக் குறியாளர் அறிவு தன்னைப்
பேணிய அந்தணர்க்கு மறைப் பொருளைப்பின்னும்
முருகுவிரி நறுமலர்மே லயற்கும் மாற்கும்
முழுமுதலை மெய்த்தவத்தோர் துணையை வாய்த்த
திருகுகுழல் உமைநங்கை பங்கன் தன்னைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே.

27. கந்தமலர்க் கொன்றையணி சடையான் தன்னைக்
கதிர்விடுமா மணிபிறங்கு கனகச் சோதிச்
சந்தமலர்த் தெரிவை யொரு பாகத்தானைச்
சராசரநற் றயானை நாயேன் முன்னைப்
பந்தமறுத் தாளாக்கிப்பணி கொண்டாங்கே
பண்ணியநூல் தமிழ்மாலை பாடுவித்தென்
சிந்தைமயக் கறுத்ததிரு அருளினானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே.

28. நஞ்சடைந்த கண்டத்து நாதன் தன்னை
நளிர் மலர்ப்பூங் கணைவேளை நாசமாக
வெஞ்சினத்தீ விழித்ததொரு நயனத்தானை
வியன்கெடில வீரட்டம் மேவினானை
மஞ்சடுத்த நீள்சோலை மாடவீதி
மதிலாரூர் இடங்கொண்ட மைந்தன் தன்னைச்
செஞ்சினத்த திரிசூலப் படையான் தன்னைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே.

29. கன்னியையங் கொருசடையிற் கரந்தான் தன்னைக்
கடவூரில் வீரட்டங் கருதினானைப்
பொன்னிசூழ் ஐயாற்றெம் புனிதன் தன்னைப்
பூந்துருத்தி நெய்த்தானம் பொருந்தினானைப்
பன்னியநான் மறைவிரிக்கும் பண்பன் தன்னைப்
பரிந்திமையோர் தொழுதேத்திப்பரனே யென்று
சென்னிமிசைக் கொண்டணிசே வடியினானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே.

30. எத்திக்கு மாய்நின்ற இறைவன் தன்னை
யேகம்பம் மேயானை இல்லாத் தெய்வம்
பொத்தித்தம் மயிர்பறிக்குஞ் சமணர் பொய்யிற்
புக்கழுந்தி வீழாமே போதவாங்கிப்
பத்திக்கே வழிகாட்டிப் பாவந் தீர்த்துப்
பண்டைவினைப் பயமான எல்லாம் போக்கித்
தித்தித்தென் மனத்துள்ளே ஊறுந்தேனைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே.

31. கல்லாதார் மனத்தணுகாக் கடவுள் தன்னைக்
கற்றார்கள் உற்றோருங் காதலானைப்
பொல்லாத நெறியுகந்தார் புரங்கள் மூன்றும்
பொன்றிவிழ அன்று பொரு சரந் தொட்டானை
நில்லாத நிணக்குரம்பைப் பிணக்கம் நீங்க
நிறைதவத்தை அடியேற்கு நிறைவித் தென்றுஞ்
செல்லாத செந்நெறிக்கே செல்விப்பானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே.

32. அரிய பெரும் பொருளாகி நின்றான் தன்னை
அலைகடலில் ஆலாலம் அமுது செய்த
கரியதொரு கண்டத்துச் செங்கண் ஏற்றுக்
கதிர்விடுமா மணிபிறங்கு காட்சியானை
உரியபல தொழில்செய்யும் அடியார் தங்கட்கு
உலகமெலாம் முழுதளிக்கும் உவப்பிலானைத்
தெரிவையொரு பாகத்துச் சேர்த்தினானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே.

33. போரரவ மால்விடையொன் றூர்தியானைப்
புறம்பயமும் புகலூரும் மன்னினானை
நீரரவச் செஞ்சடைமேல் நிலாவெண் திங்கள்
நீங்காமை வைத்தானை நிமலன் தன்னைப்
பேரரவப் புட்பகத்தே றுடையவென்றிப்
பிறங்கொளிவா ளரக்கன்முடி யிடியச் செற்ற
சீரரவக் கழலானைச் செல்வன் தன்னைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே.

திருஞானசம்பந்தர் இத்தலத்துக்குவந்து போற்றியதைக் குறிக்கும் பெரிய புராணப் பாடல்கள் :—

34. அருகணையும் திருப்பதிகள் ஆனவெலாம்
அங்கணரைப் பணிந்துபோற்றிப்
பெருகியஞானம் பெற்ற பிள்ளையார்
எழுந்தருளும் பெருமைகேட்டுத்
திருமருவு செங்காட்டங் குடிநின்றுஞ்
சிறுத்தொண்ட ரோடிச் சென்றங்
குருகுமனங் களிசிறப்ப எதிர்கொண்டு
தம்பதியுட் கொண்டுபுக்கார்.

35. சிறுத்தொண்ட ருடன்கூடச் செங்காட்டங்
குடியில்எழுந் தருளிச் சீர்த்தி
நிறுத்தெண்டிக் கிலுநிலவுந் தொண்டரவர்
நண்பமர்ந்து நீலகண்டம்

பொறுத்தண்டர் உயக்கொண்டார் கணபதீச்
• சரத்தின்கட் போகம் எல்லாம்
வெறுத்துண்டிப் பிச்சைநுகர் மெய்த்தொண்ட
ருடன்அணைந்தார் வேதகீதர்.

36. அங்கணைந்து கோயில்வலங் கொண்டருளி
அரவணிந்தார் அடிக்கீழ் வீழ்ந்து
செங்கண் அரு விகள்பொழியத் திருமுன்பு
பணிந்தெழுந்து செங்கைகூப்பித்
தங்கள்பெருந் தகையாரைச் சிறுத்தொண்டர்
தொழஇருந்த தன்மைபோற்றிப்
பொங்கிஎழும் இசைபாடிப் போற்றிசைத்தங்
கொருபரிசு புறம்பு போந்தார்.

37. போந்துமா மாத்திரர்தம் போரேற்றின்
திருமனையிற் புகுந்து சிந்தை
வாய்ந்தமா தவரவர்தாம் மகிழ்ந்தருள
அமர்ந்தருளி மதில்கள் மூன்றும்
காய்ந்தமால் விடையார்தங் கணபதீச்
சரம்பரவு காதல்கூர
ஏந்துநூல் அணிமார்பர் இன்புற்றங்
கன்பருடன் இருந்த நாளில்.

• திருநாவுக்கரசர் இத்தலத்துக்கு வந்ததைக் குறிக்கும் பாடல்கள் :—

38. சீர்தரு செங்காட்டங் குடிநீடுந்திருநள்ளா
ரூர்தரு சோலைசூழ்தரு சாந்தை அயவந்தி
வார்திகழ் மென்முலையா ளொரு பாகன்திருமருகல்
ஏர்தரும் அன்பால்சென் று வணங்கிஇன்புற்றார்.

39. பிள்ளையார் எழுந்தருளப் பெருவிருப்பால் வாகீசர்
உள்ளமகிழ்ந் தெதிர்கொண் டுங் குடன்உறையு நாளின்கண்
வள்ளலார் சிறுத்தொண்டர் மற்றவர்பால் எழுந்தருள
எள்ளருஞ்சீர் நீலநக்கர் தாமும் எழுந் தருளினார்.

**சிவநாமப் பல்தொடை வெண்பா**

40. வாய்த்த மலர்க்குழலன் மாதுசெங்காட் டங்குடியில்
ஏத்துகண வாகணப தீச்சுரா.

**சிறுத்தொண்டரைக் குறிக்கும் பாடல்கள் :—**

41. வாளான் மகவரிந்தூட்டவல்லே னல்லன்மாது சொன்ன
சூளால் இளமைதுறக்க வல்லேனல்லன் தொண்டுசெய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல்லேனல்லன் நானினிச்
சென்று
ஆளாவ தெப்படியோ திருக்காளத்தி யப்பனுக்கே.

42. நெருப்பான மேனியர் செங்காட்டிலாத்தி நிழலருகே
இருப்பார் திருவுளமெப்படியோ இன்னமென்னை யன்னைக்
கருப்பாசயக் குழிக்கே தள்ளுமோ கண்ணன் காணரிய
திருப்பாதமே தருமோ தெரியாது சிவன் செயலே.

43. மண்காட்டிப் பொன்காட்டி மாயஇருள்காட்டிச்
செங்காட்டி லாடுகின்ற தேசிகனைப் போற்றுமல்
கண்காட்டும் வேசியர்தங் கண்வலையிற் சிக்கிமிக
அங்காடிநாய்போல் அலைந்தனையே நெஞ்சமே.

*

நின்முதல் வழிபடத் தன்மகன் தடிந்த
தொண்டர்மனையில் உண்டல்போற்றி.

—பட்டினத்தார்

44. புலியின் அதளுடைப் புண்ணியற் கின்னமு தாத்தனதோர்
ஒலியின் சதங்கைக் குதலைப்புதல்வன் உடல்துணித்துக்
கலியின் வலிகெடுத்தோங்கும் புகழ்ச்சிறுத்
தொண்டன்கண்டூர்
மலியின் பொழிலொண்செங் காட்டங்குடியவர் மன்னவனே

45. விரும்பும் புதல்வனை மெய்யரிந்தாக்கிய இன்னமிர்தம்
அரும்பும் புனற்சடையாய் உண்டருள் என்றடிபணிந்த
இரும்பின் சுடர்க்களிற்றான் **சிறுத்தொண்டனை** ஏத்துதிரேல்
சுரும்பின் மலர்த்தமிழா கரன்பாதத் தொடர்வெளிதே.

(நம்பியாண்டார்நம்பி)

46. சிவனந்தஞ் செல்கதிக்கோர் கண்சேர்வ தாக்குஞ்
சிவனந்தஞ் செல்கதிக்கோர் கண்ணும்—சிவனந்தஞ்
சேரும் உருவுடையீர் செங்காட்டங் குடிமேற்
சேரும் உருவுடையீர் செல். (பரணதேவர்)

47. வரங்கள்தரும் செய்ய வயிரவர்க்குத் தங்கள்
கரங்களினால் அன்று கறியாக்க—இரங்காதே
கொல்வினையே செய்யுங் கொடுவினையே யானவற்றை
வல்வினையே என்றதுநாம் மற்று.

(திருக்களிற்றுப்படியார்)

48. காலனையுங் காமனையுங் காட்டுசிறுத் தொண்டர்தரு
பாலனையுங் கொன்ற பழிபோமோ—சீலமுடன்
நாட்டிலே வீற்றிருந்த நாதரே நீர்திருச்செங்
காட்டிலே வீற்றிருந்தக் கால்.

49. சட்டியிலே பாதியந்தச் சட்டுவத்தி லேபாதி
இட்டகலத் திற்பாதி யிட்டிருக்கத்—திட்டமுடன்
ஆடிவந்த சோணேசர் அன்றழைத்த போதுபிள்ளை
ஓடிவந்த தெவ்வா றுரை.

50. நச்சரவம் பூண்டதில்லை நாதரே தேவரீர்
பிச்சையெடுத் துண்ணப் புறப்பட்டும்—உச்சிதமாம்
காளமேன் குஞ்சரமேன் கார்க்கடல்போ லேமுழங்கு
மேளமேன் ராஜாங்க மேன். (காளமேகப்புலவர்).

51. மெய்யிலே ஒருபாதி உமைக்களித்த செங்காட்டு விமலனாரே
மய்யிலே தோய்ந்தவிழிச் சந்தனமான் தலைக்கறியை
வளமாயாவின்
நெய்யிலே தான்சமைத்துக் கொடுத்திருந்தும்
படைத்திருந்தும் நீர்தானின்று
கய்யிலே மழுவெடுத்தாற் பொய்யாமோ பிள்ளைகொன்ற
களவுதானே.
(சொக்கநாதப்புலவர்).

52. காலனையுங் காமனையுங் காட்டுச்சிறுத் தொண்டனிட
பாலனையுங் கொன்ற பழிகாரன் அம்மானை
பாலனையுங் கொன்ற பழிகாரனுமாயின்
சாலவுயர்ந் தோர்முடியைச் சாய்க்காரோ அம்மானை
சாய்த்தவ ரெல்லாம் பெரியசைவர் காணம்மானை.

53. அன்னந் தடஞ்சூழும் ஆனகத லிக்குலமே
தென்னம் பழஞ்சொரியும் செங்காடே—முன்னமே
பாங்குபெற்ற தொண்டருடன் பாலன் கறிக்குகந்து
ஓங்குமுத்த ராபதியார் ஊர். (தனிப்பாடல்).

54. —வைரவராய்
வந்தவற்கு வாளான் மகவையரிந் தூட்டிமகிழ்
சிந்தாச் சிறுத்தொண்டர் சீர்போற்றி.
(போற்றிக்கலிவெண்பா).

55. காய்க்கறிவே றொன்றுதொடாக் கள்ள வயிரவர்க்கோர்
சேய்க்கறிசெய் திட்டார் சிறுத்தொண்டர்—வாய்க்கினிதா
இன்னு திரக்கப்படுதல் இரந்தவர்
இன்முகங் காணும் அளவு. (திருத்தொண்டர் மாலை).

*அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் :—*

56. வங்கார மார்பிலணி தாரொடுயர் கோடசைய
கொந்தார மாலைகுழ லாரமொடு தோள்புரள
வண்காதி லோலைகதிர் போலவொளி வீசஇதழ்—மலர்போல
மஞ்சாடு சாபநுதல் வாளணைய வேல்விழிகள்
கொஞ்சார மோககிளி யாகநகை பேசியுற
வந்தாரை வாருமிரு நீருறவெ ழைசமயல்—இடுமாதர்
சங்காளர் சூதுகொலை காரர்குடி கேடர்சுழல்
சிங்கார தோளர்பண ஆசையுளர் சாதியிலர்
சண்டாளர் சீசியவர் மாயவலை யோடடியேன்—உழலாமல்
சங்கோதை நாதமொடு கூடிவெகு மாயையிருள்
வெந்தோட மூளவழல் வீசவுப தேசமது
தன்காதி லோதியிரு பாதமலர் சேரவருள்—புரிவாயே
சிங்கார ரூபமயில் வாகனந மோநமென
கந்தா குமாரசிவ தேசிகந மோநமென
சிந்தூர பார்வதிசு தாகரந மோநமென—விருதோதை
சிந்தான சோதிகதிர் வேலவந மோநமென
கங்காள வேணிகுரு வானவந மோநமென
திண்சூர ராழிமலை தூள்படவை வேலைவிடு—முருகோனே
இங்கீத வேதபிர மாவைவிழ மோதியொரு
பெண்காத லோடுவன மேவிவளி நாயகியை
இன்பான தேனிரச மார்முலைவி டாதகர—மணிமார்பா
எண்டோளர் காதல்கொடு காதல்கறியே பருகு
செங்காடு மேவிபிர காசமயில் மேலழகொ
டெண்காதல் மாலைமுடி ஆறுமுக வாவமரர்—பெருமாளே.

## திருச்செங்காட்டங்குடித் தலபுராணம்

பாயிரம் முதல் அபிடேகச் சருக்கம் வரையில் 22 சருக்கங்கள் உள்ளன. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இத்தலத்தைப் பற்றிய பல வரலாறுகள் கூறப்பட்டுள்ளன. இதில் துதிப் பாடல்கள் மட்டும் சேர்க்கப்பெற்றுள்ளன.

**வேண்டும் விநாயகர்**

57. தூண்டிக் கொண்டமணி விளக்காய்ச்
சுடர்விட்டெரித்துத் தொண்டருளம்
ஆண்டுகொண்ட வீடாகி, யமருமையர்க் கமையிட
நீண்ட தனது கருத்தாக் கிகரில் மனையாளுளங் நேர
வேண்டிக்கொண்ட சிறுத்தொண்டர், வேண்டும்பிள்ளை
பதம்பணிவாம்

## வாதாபி கணபதி

58. சூதாவி நீலநிகர் முலைவிழிவல் லபை யணைந்து
தொண்டர் செய்தி
ஓதாமுன் பொன்னிநதி கொணர்ந்து சிவன் பாதத்தை
உன்னிச்சூழ்ந்து
தீதாவி செவிகவருந் தீங்குழலோன் விழியளித்துச்
செல்வ நல்கும்
வாதாவி மதக்களிற்றின் பதயுகத்தா மரையுளத்தில்
வைத்து வாழ்வாம்.

## கணபதீசர் (சிவபெருமான்)

59. சீர்தந்த நவப்பொருளா யெண்வடிவா யேழிசையாய்த்
திகழா தாரஞ்
சார்தந்த வாறுகி யைந்தெழுத்தாய் நான்மறையாய்ச்
சாத்துகாதிப்
பேர்தந்த முக்குணமா யிருசுடரா யொருமுதலாய்ப்
பெருகா நின்ற
கார்தந்த ஆத்திவனக் கணபதீச் சரத்தானைக்
கருத்துள் வைப்பாம்.

## வாய்த்த திருக்குழலியம்மை

60. கங்காட்டுங் கரங்களத்துக் கறை காட்டும்
பிறை மவுலிக் கடவுள் மாலோ
டங்காட்டு நான்முகனை ஐங்கரனை அறுமுகனை
அளித்தபேதை
சங்காட்டும் புனற்கரஞ் சேர்க் காவேரி வளங்காட்டும்
தமிழ் நன்னாட்டிற்
செங்காட்டங் குடி வாய்த்த திருக்குழலி உபயபதஞ்
சென்னிசேர்ப்பாம்.

## ஸ்ரீ உத்தராபதீசர்

61. பனியுண்ணு தகல்விசும்பிற் பரிதிதேர் தடுத்தமலை
பதித்தகும்ப
முனியுண்ணு கடலினெழு விடங்தொடர முண்டகன்மால்
முறையிட்டோட
நனியுண்ணு துயிரளித்து நரமதலைக் கறிவேட்டு
நல்லோரின்றி
தனியுண்ணு வைரவனர் சிலம்பார்க்க நடந்த மலர்
சரணஞ் சேர்வாம்.

### முருகப்பெருமான்

62. கார்மாவைப் பொருதமுக்கட் கடவுளரு ளுடன் கௌரி
கைவேல்பெற்றுச்
சீர்மாவைப் புணர்ந் தவனூ ரமரேசன் மந்தாரஞ்
சிதையத் தாத்தி
நீர்மாவைப் பிறிதாக்குந் தளிர்முகங்கீ ளுறத்தனியே
நின்ற வென்றிச்
சூர்மாவைத் தடிந்தானை யிருகரத்தா லெப்போதுந்
தொழுதல் செய்வாம்.

### நடராஜர்—(ஆடல்வல்லார்)

63. சஞ்சிதமுதலா மூன்றுவினைகளுந் தவிர்ந்துஞானக்
கஞ்சுகம் புனைந்தபாம்பும் புலியுமோர் காலம்போற்ற
வெஞ்சமர்க் காளிவீரம் வெளிவரக் கனகமன்றுள்
குஞ்சிதப்பாதங் கொண்ட கூத்தனை யேத்தல் செய்வாம்.

### நந்திகேசுவரர்

64. அலையுண்டான்முதல் முனிவ ரளப்பிலர்க்கும்
ஆவியுட னலகைக் கும்ப
முலையுண்டான் முதற்சுரற்கும் ஏனையர்க்கும்
அமுதமுன்று ளங்கையீந்த
தலையுண்டான்முதற்றழும்பி லவைவிலக்கித்
தம்பிரம்பாற் றழும்புநல்கும்
சிலையுண்டான் காதலனைச் சிந்தைசெய்து
சிந்தனையைத் தீர்தல்செய்வாம்.

### சண்டிகேசுவரர்

65. கோத்திரளின் பாலாட்டித் தந்தையிரு
தாள்தடிந்து கோதில்லாத
மூர்த்தியருட் பரிகலமுந் தொண்டருக்கு
நாயகமா முதன்மையுஞ்சீர்
பூத்திகழு மயன்பறந்து மறியாத
பிறைமவுலிப் புறத்துநாளுஞ்
சாத்தியமாலையும்பெற்ற தண்டீசர்
இருபதும சரணம் போற்றி.

### திருஞானசம்பந்தர்

66. எழுவேறல் லாதபுயக் குலச்சிறையார்
சிந்தைமகிழ் வெய்தவேதக்
குழுவேற விளங்குசைவந் தழைத்தேற
மறுசமயக் கொள்கையெல்லாம்

வழுவேற வழுதிமெய்யிற் பொடியேற
அருகர்முற்றும் வயினிரண்டிற்
கழுவேற வைகையிலே யெதிரேற
விடுத்தானைக் கருதிவாழ்வாம்.

### திருநாவுக்கரசர்

67. மொய்யானை யுரித்தானை மதலைமொழி
யானைமுனைப் பாடியேத்துந்
துய்யானைக் கலைசுருதி வலத்தானைப்,
பொடியணிந்து சூலஞ்சாத்தும்
மெய்யானை ஞானவருள் பூத்தானை
மிதந்தானை மழுமானேந்தும்
கையானை வணங்கிநின்ற காலானை
யகலாது கருத்துட் கொள்வாம்.

### சுந்தரர்

68. சிதலைவா யுண்மலிந்த விந்தனம்போல்
உள்ளழிந்தோர் தெரிவைதேம்பும்
விதலைவாய் மொழிகேளா அவனுசி
இடத்தின்முன் விழுங்கிப்போன
முதலைவாய் மதலைநின்ற வயதுமுடன்
நிரம்பிடவே கொடுத்தாளேற்று
முதலைவாய் வருகவெனச் செந்தமிழ்வாய்
மலர்ந்தானை முடிதாழ்ந்துய்வாம்.

### திருவாதவூரர்

69. வருகோவை யஞ்சலென வரையெடுத்த
கடல்வண்ணன் மலராமென்னத்
தருகோவை யணிந்த விருதாளானைத்
தோள்களாற் றகைமைசான்ற
விருகோவை யுடையானை யெம்மறைக்கும்
எப்பொருட்கு மேயாஞானத்
தொருகோவை யெழுதுகென வொருகோவை
யிசைத்தானை உள்ளங்கொள்வாம்.

### சிறுத்தொண்டர்

70. கடிக்கமலஞ் சூழ்புவியில் மறையவராய்
வாதாவிக் கடிந்துமன்ற்ற்
படிக்கமல மறவடியார்க் கனம்படைத்தோர்
சீராளற் பயந்த நங்கை

பிடிக்கமலங் காதரிந்து சமைத்தகறி
வயிரவராம் பெருமாற்கீந்தே
அடிக்கமலங் குடிபெறுநற் பரஞ்சோதி
சிறுத்தொண்டர்க் கன்புசெய்வாம்.

**வெண்காட்டு நங்கை—சந்தன நங்கை.**

71. மருங்காட்டு மறவாளர் விரும்பு முடற்
சீராளன் மலர்க்காலாதி
ஒருங்காட்டுந் தலைக்கறிசெய் சந்தனத்தார்
சரண மெலா வுலகுங் கூட்டி
நெருங்காட்டு திங்கள் விழா வொலிகூரு
முகிலூரு நெடிய கன்னற்
கருங்காட்டுச் செங்காட்டு வெண்காட்டு
நங்கைபதக் கமலஞ் சேர்வாம்.

**சீராளதேவன்**

72. காரேழுந் தடுத்தசிறு கண்ணனெனக்
காசினியோ ரெவரும் போற்றப்
பாரேழும் படைத்தளிக்கும் ஒருமுதற்குப்
பசிதீர்க்கு மருந்தாய் நின்றே
நீரேழு கலங்கிடினு நிலையலையான்
றுணியுமென நிகழ்த்துஞ் செல்வச்
சீராளப் பிள்ளையிரு சிறுசதங்கை
பதமெமது சென்னி சேர்ப்பாம்.

---

இத்தலத்துச் சிவபெருமான்பேரில் வாலாம்பிகைதாசர் என்ற சோழபுரத்துப்பிள்ளை அவர்கள் இயற்றிய **அமுதுபடைச் சிந்து** என்னும் ஓர் நூல் இருப்பதாகத் தெரிகிறது.

**வாழ்த்து**

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக மும்துயர் தீர்கவே.

ஸ்ரீ உத்தராபதீஸ்வரர் சேவடி போற்றி

திருச்சிராப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட், திருச்சி-2.